Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 157

திங்கட்கிழமை
02 மே 2022

சித்திரை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை:
50/=



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய மே தினம் கிளிநொச்சியில் நேற்று கொண்டாடப்பட்டது.
(விரிவு உள்ளே)

### இலங்கையின் பொருளாதார நெருக்கடியை

# அனுமனைப் போன்று சுமக்க மோடி தயார்!

## பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலை கொட்டகலையில் தெரிவிப்பு



நுவரெலியா, மே 2

இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் போராடிக்கொண்டிருக்கின்றது. அன்று அனுமான் எப்படி சஞ்சீவி மலையை சுமந்தாரோ, அதுபோலவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சுமப்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் தயாராகவே இருக்கின்றார் என்று இந்தியாவின் ஆளுங்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவரான அண்ணாமலை தெரிவித்தார். 15 ➤

## கோத்தாவும் பதவி விலக வேண்டும்

*மைத்திரி திடீர் கோரிக்கை*
*தேர்தலே தீர்வு எனவும் தெரிவிப்பு*

கொழும்பு, மே 2
மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அனைத்துத் தலைவர்களும் பதவி விலகி தேர்தலை நடத்தி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வ 15 ➤

## மே 5 க்கு பின்னர் வடக்கில் மழை

யாழ்ப்பாணம், மே 2
எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை தென் 15 ➤

### காணாமல் ஆக்கப்பட்டோருக்கு

## ஓ.எம்.பி. ஊடாக எந்த நன்மையும் இல்லை

4 மாதங்களில் பதவி விலகினார் சட்டத்தரணி சிராஸ் நூர்தீன்

கொழும்பு, மே 2
காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்துக்கு (ஓ.எம்.பி.) ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் மூத்த சட்டத்தரணி 15 ➤

### ராஜபக்சக்களுடனான

## 15 ஆண்டு கால உறவை இன்றுடன் முறிக்கிறோம்!

*பா.ஜ.க. தலைவர் முன்னிலையில் இ.தொ.க. பொதுச் செயலர் ஜீவன் தொண்டமான் சத்தியம்*

நுவரெலியா, மே 2
ராஜபக்சக்களுடனான 15 ஆண்டு உறவை இன்றுடன் முறித்துக் கொள்கின்றோம் என மே தினக் கூட்டத்தில் இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் அறிவித்துள் 15 ➤

### தடுப்பூசியை கட்டாயமாக்கிய

## வர்த்தமானி வாபஸ்!

கொழும்பு, மே 2
பொது இடங்களுக்கு பொது மக்கள் செல்ல கொவிட் தடுப்பூசியின் மூன்று டோஸ்களையும் பெற்றிருக்க வேண்டும் என கட்டாயப் 15 ➤

## ரமழான் பண்டிகை நாளை

கொழும்பு, மே 2
இலங்கையில், புனித சவ்வால் மாதத்துக்கான தலைப்பிறை 15 ➤

## சமத்துவமும், ஐக்கியமான தேசத்தை கட்டியெழுப்பும் மாற்றம் சிங்களவரிடம்!

- வரவேற்கின்றது தமிழ்க் கூட்டமைப்பு
- மே நாள் பிரகடனத்தில் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 2
நீறுபூத்த நெருப்பாக நின்றெரியும் இனப் பகைமையை இல்லாதொழித்து, சமத்துவமும் ஐக்கியமும் மிக்க சரித்திர தேசமொன்றைக் கட்டியெழுப்பும் சிந்தனை இன்று சிங்கள மக்களிடம் எழுந்துள்ளமை மகிழ்ச்சியும், 11 ➤





## கூடாரங்களை அகற்றியதால் நட்டநடுவீதியில் போராட்டம்!

- அலரிமாளிகை முன்பாக நேற்றுப் பெரும் பதற்றம்
- கோத்தா கோ கமவிலிருந்தும் மைனா கோ கமவுக்குப் பேரணி

கொழும்பு, மே 2
அலரி மாளிகைக்கு முன்பாக 'மைனா கோ கம' போராட்டக் கூடாரங்களை பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு அகற்றினர். 15 ➤

### நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்

## 4 ஆம் திகதி சபைக்கு!

கொழும்பு, மே 2
நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் 15 ➤

## குறைவான விலையில் ரஷ்ய மசகு எண்ணெய்!

இலங்கை கடும் முயற்சி

கொழும்பு, மே 2
உக்ரைனுடனான மோதல் காரணமாக சர்வதேசத் தடை 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் மேதினப் பேரணி; சவப்பெட்டி எரித்து அரசுக்கு எதிர்ப்பு









கிளிநொச்சி, மே 2

**கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட மே தின நிகழ்விலும் 'கோத்தா கோ ஹோம்' கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன், சவப்பெட்டியும் எரித்து எதிர்ப்பு வெளியிடப்பட்டது.**




தமிழ்த் தேசிய மேதின நிகழ்வுகள் கிளிநொச்சியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து ஆரம்பமானது. கிளிநொச்சி டிப்போ சந்தியை பிற்பகல் 3.30 மணியளவில் அடைந்தது. பேரணியில் கலந்து கொண்ட மக்கள் 'கோத்தா கோ ஹோம்' கோஷத்தையும், வடக்கு- கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோஷத்தையும் எழுப்பியதுடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எங்கே? என்றும் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அரசியல் கைதிகளின் விடுதலை, விவசாயிகளின் பிரச்சினைகளை வெளிப்படுத்தம் கருத்தோவியங்களை தாங்கிய வாகன ஊர்தியும் பேரணியில் இணைந்து கொண்டதுடன், மக்கள் பதாகைகளையும், கோஷங்களையும் எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு வலுப்படுத்தினர். ராஜபக்சக்கள் குடும்பத்தின் முகங்களை அணிந்தவாறு சவப்பெட்டியையும் ஏந்தி மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். சவப்பெட்டி டிப்போ சந்தியில் மக்களால் எரியூட்டப்பட்டது. இதன்போது பறை இசையும் இசைக்கப்பட்டு மரண சடங்குக்கு ஒப்பான எதிர்ப்பு மக்களால் வெளிப்படுத்தப்பட்டது.

பேரணியில் மக்கள் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். தொடர்ந்து மேதினக் கூட்டம் பசுமைப் பூங்காவில் இடம்பெற்றது. பறை இசை இசைக்கப்பட்டதனைத் தொடர்ந்து சுடர்கள் ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஒ-113)



## விவசாயிகளை முன்னுரிமைப்படுத்தி சுதந்திரக் கட்சி மேதினப் பேரணி

கொழும்பு, மே 2

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாவட்ட ரீதியில் மே தினக் கூட்டங்களையும், மே தினப் பேரணிகளையும் நேற்று ஏற்பாடு செய்திருந்தது. சுதந்திரக் கட்சியின் பிரதான மே தினக் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலநறுவையில் இடம்பெற்றது. (ஒ-இ)



## உழைக்கும் மக்கள் அதிகாரத்தை நோக்கி

## வவுனியாவில் மேதினப் பேரணி

வவுனியா, மே 2

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதினப்பேரணி வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய பேரணி பசார் வீதி வழியாக இலுப்பையடிச் சந்தியை அடைந்து, அங்கிருந்து பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தை அடைந்தது.

"உழைக்கும் மக்களே ஒன்று சேருங்கள்", "நடைமுறையில் உள்ள நாசகார பொருளாதாரக் கட்டமைப்பை வீழ்த்துவோம்", "உழைக்கும் மக்கள் அதிகாரத்தை நோக்கி புரட்சிகர மே தினத்தில் அணிதிரள்வோம்" என்ற கோஷங்களை முதன்மைப்படுத்தி மேதின ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது. (ஒ-110)

## ஜே.வி.பி. 4 இடங்களில் மே தினப் பேரணி



ஜே.வி.பி. 4 இடங்களில் மே தினக் கூட்டத்தை நடத்தியது. அதன் பிரதான மே தின ஊர்வலம் நேற்று பிற்பகல் மாளிகாவத்தை பீ.டி.சிறிசேன விளையாட்டரங்கில் ஆரம்பமாகி கொழும்பு கோட்டையை வந்தடைந்தது. யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் மாத்தறை ஆகிய இடங்களிலும் ஜே.வி.பி.யின் மே தினக் கூட்டங்கள் இடம்பெற்றன. (ஒ-இ)

## இது மக்களின் காலம் கோஷத்துடன் கிளிநொச்சியில் சமத்துவ மேதினம்

கிளிநொச்சி, மே 2

சர்வதேசத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் சமத்துவ மே தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

தாராளவாதம், இன ஒடுக்குமுறை, இராணுவமயமாக்கல், அந்நிய ஆதிக்கம், மக்கள் விரோத போக்கு, சர்வாதிகாரம், எல்லாவற்றுக்கும் எதிராக போராடுவோம். இது மக்களின் காலம் என்ற பிரதான கோஷத்துடன் சமத்துவக் கட்சியின் மே தினம் நடத்தப்பட்டது.

பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர்கள் அமைப்பு, விவசாய அமைப்பு, கல்விச் சமூகம், உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இங்கு உரையாற்றிய சமத்துவக் கட்சியின் பொதுச் செயலரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார், வரலாறு சந்தித்திராத பொருளாதார நெருக்கடியை நாட்டு மக்களின் மீது ஆளும் வர்க்கம் சுமத்தியுள்ளது. தங்கள் அளப்பரிய பங்களிப்பை நாட்டுக்காகச் செலுத்துகின்றபோதும் உழைக்கும் மக்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுகிறார்கள்.

உணவுக்கே வழியற்ற ஆபத்தான நிலையை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குப் பொருத்தமான, நிலையான தீர்வைக் காண்பதற்கு நீண்டகால வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் இதுவரை பெரிதாக முயற்சிக்கவில்லை. எனவே புதிய மாற்றமொன்றைக் கோரும் வகையில் மாற்றத்துக்கான சமத்துவ மேதின நிகழ்வை நடத்துகின்றோம்- என்றார். (ஒ-214)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பல்வேறு கோரிக்கைகளுடன் பள்ளிமுனையில் போராட்டம்

மன்னார், மே 2

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மன்னார், பள்ளிமுனை கிராம மக்கள் பள்ளிமுனைக் கடற்கரைக்கு அருகில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவேண்டும், இனப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"ஆட்சியாளர்களே அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கையை நசுக்காதீர்கள்", "குழந்தைகளுக்கான பால்மா எங்கே?", "தொழிலாளர்களின் பட்டினி நிலைக்குப் பதில் சொல்", "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு", "விலை உயர்வு உனக்கு என்ன விளையாட்டா?", "கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருளை வழங்க ஆவன செய்", "திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து", "மன்னார் வளைகுடாவில் கடல்வளங்களை அழிக்காதே", "வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் பள்ளிமுனை லூசியா ஆலயப் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(க-213)

# கோத்தாபய, மஹிந்த பதவிவிலக வேண்டும்

### மே தின உரையில் ரணில் முழக்கம்



கொழும்பு, மே 2

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளடங்கலான அரசாங்கமும் பதவி விலகவேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கை. எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடும் அதுவே என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் மிகவும் எளிமையான முறையில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது நாடு வரலாறு காணாத அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. வியாபார நடவடிக்கைகள் வங்குரோத்தடைந்துள்ளன. விவசாயிகளுக்கு உரம் இல்லை, மீனவர்களுக்கு டீசல் இல்லை. பலர் தொழிலை இழந்துள்ளனர். மேலும் பலருக்கு தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே, இளைஞர்களுக்கு மட்டுமல்ல நாட்டில் வாழும் அனைவருக்கும் எதிர்காலம் குறித்து அச்சநிலை உருவாகியுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக நாட்டில் அனைத்து இடங்களிலும் போராட்டம் இடம்பெறுகின்றது.

ஜனாதிபதியும், பிரதமரும் பதவிவிலக வேண்டும் என ஒரு சாராரும், ஜனாதிபதி இருக்கட்டும், பிரதமர் செல்லட்டும் என மற்றுமொரு சாராரும் குறிப்பிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் 20க்குப் பதிலாக 21 ஐக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

நான் '20'க்கு எதிர்ப்பு. எனினும் 21இனைக் கொண்டு வந்தாலும் பொருளாதாரப் பிரச்சினை தீரப்போவதில்லை. அதனைத் தீர்ப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்- என்றார்.

(க-44)



அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் ஒருநாள் பொதுவேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்த தொழிற்சங்கங்களும் சிவில் அமைப்புக்களும் இணைந்து கொழும்பு ஜோன்ஸ் மைதானத்தில் தொழிலாளர் பேரணியை நடத்தின. (ஒ-இ)

## மஹிந்த, கோத்தா இருவருமே பதவிகளிலிருந்து விலகவேண்டும்

### யாழில் வைத்து ரில்வின் சில்வா கூஞரை

யாழ்ப்பாணம், மே 2

நாட்டில் தற்போதுள்ள நிலைமைக்கு காரணமாக மஹிந்த மற்றும் கோத்தாபய ஆகிய இருவரும் பதவி விலகவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மே தின நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடிக்குள்ளான மே தினத்தில் ஒன்றுகூடியுள்ளோம். அன்றாடக் கூலித் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுவது தொடர்பில் ஆட்சியாளர்கள் சிந்திப்பதில்லை. தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடுகின்ற இன்றைய நாளில், தொழிலாளர்களின் உரிமையை நசுக்குகின்றன அரசாங்கம் வீடு செல்லவேண்டும்.

நாட்டில் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் கடனை வாங்கி நாட்டை மூழ்கடித்துச் செல்கின்றன. தொடர்ந்து பதவிக்கு வருபவர்களும் முன்னையவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி, தாங்களும் கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

ராஜபக்சக்கள் இந்த நாட்டை படிப்படியாக விற்று வருகின்றார்கள். இந்த நாட்டில் வாழ்பவர்கள் எங்கு செல்வது என்று தெரியவில்லை- என்றார். (ஒ-20)







## தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தி ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் ஊர்வலம்

வவுனியா, மே 2

தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தி, ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் வவுனியாவில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம், மணிக்கூட்டுச் சந்தியை அடைந்து, அங்கிருந்து மீண்டும் பழையபேருந்து நிலையப்பகுதிக்குச் சென்றது.

'ஆடைத்தொழிலில் ஈடுபடுகின்ற பெண் தொழிலாளர்களாகிய நாம், நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டு வருவதற்கான உழைப்பை வழங்குகின்றோம்.

டொலரின் பெறுமதி உயர்ந்து சென்றதற்கு நிதி முகாமைத்துவத்தின் அரிச்சுவடிகூடத் தெரியாதவாறு செயல்பட்ட தற்போதைய அரசாங்கத்தின் திறமையின்மையே காரணம்.

நாடுமுழுவதும் மக்கள் போராட்டங்கள் எழுச்சிபெற்று வருகின்றன. அவற்றை அரசு செவிமடுத்ததாகத் தெரியவில்லை.

நிகழ்கால ஏகாதிபத்திய ஆட்சியைத் தோற்கடித்து, கட்டமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு இடமளித்து, அடிமைத்தனமற்ற இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைவோம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகாவிட்டால் 6ஆம் திகதி பிரளயம்!

## எச்சரிக்கின்றன தொழிற்சங்கங்கள்

**கொழும்பு, மே 2**

**எதிர்வரும் 6ஆம் திகதிக்குள் ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவி விலகுவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்காவிட்டால் நாட்டின் நிலைமை படுமோசமாகும் என்று தொழிற்சங்கப் பிரதிநிதி ரஞ்சன் ஜயலால் எச்சரித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அனைத்துத் தொழிற்சங்கங்களும் இறுதிப் போருக்குத் தயார். அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து பெரும் ஹர்த்தாலுக்கு தயாராகி வருகின்றன. அதை மீளப்பெற முடியாது. அதனால் 6ஆம் திகதி விடியும்வரை காத்திருக்கக்கூடாது- என்றார். (எ-இ)

# மக்களிடம் அரசாங்கம் உண்மையாக நடக்கவேண்டும்

*முன்னாள் பிரதி சபாநாயகர் தெரிவிப்பு*



கொழும்பு, மே 2

பொருளாதார விவகாரம் தொடர்பாக அரசாங்கம் மக்கள் மத்தியில் உண்மைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என முன்னாள் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பாதிப்பால் எதிர்வரும் மாதங்களில் பெரும் நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள நேரிடும். அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான பேச்சை ஆரம்பித்துள்ள போதும், அது காலம்தாழ்த்தி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை - என்றார். (எ-இ)

# அனைத்தும் கைமீறி விட்டன கோத்தாவுக்கு இறுதி வாய்ப்பு

## விஜயதாஸ ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, மே 2

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார அரசியல் நெருக்கடிகளால் அனைத்தும் கைமீறிவிட்டன. இந்தத் தருணத்தில் ஜனாதிபதி இறுதி முடிவெடுக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த ஏப்ரல் மாதம் அரசியல் ரீதியாக முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அதனை நான் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதியிடம் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம்.

அதனை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பொருட்டாகக் கொள்ளவில்லை. அதன்பின்னர் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைய ஆரம்பித்தன. பொருளாதார நிலைமைகள் இறுக்கமான கட்டத்தை அடைந்தன. பொதுமக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர்.

இந்தநிலையில்கூட, 21ஆவது திருத்தச்சட்டத்தை தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவருவதற்கான வரைவொன்றை தனிநபர் பிரேரணையாக நான் உள்ளிட்ட எமது அணியினர் சபாநாயகரிடத்தில் கையளித்துள்ளோம்.

ஆனாலும் அரசாங்கம் கரிசனை காட்டவில்லை. தற்போதுகூட ஜனாதிபதி சர்வகட்சிகளின் பங்கேற்புடனான இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்குத் தயா ராக உள்ளதாக ஜனாதிபதி தெரிவிக்கின்றார்.

எதிர்க்கட்சி இந்தச் செயற்றிட்டத்தில் இணைவதற்குத் தயாரில்லை. அந்தவகையில் நாட்டின் நெருக்கடிகளுக்குச் சுமுகமான தீர்வுகளைக் காணும் காலம் கடந்துவிட்டது. அனைத்தும் கைமீறிவிட்டன.

ஜனாதிபதி கோத்தாபயவிடமே தீர்வுக்கான இறுதித் தீர்மானம் உள்ளது. நாடாளுமன்றுக்கு அதிகாரங்களை வழங்கப்போகின்றாரா? புதிய பிரதமர் தலைமையில் அரசாங்கத்தை அமைக்கப்போகின்றாரா? இல்லை போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக தான் பதவி விலகப் போகின்றாரா? என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும். அதனைத் தாமதப்படுத்தினால் நிலைமை மேலும் உக்கிரமடையும். போராட்டங்கள் தீவிரமடையும் - என்றார். (க-இ)

நினைவழியா 16ஆம் ஆண்டில்....



ஆர். ரஞ்சித்குமார்



ப. சகாயதாஸ்

உதயனுக்காக உயிர்க்கொடை தந்தோரை நினைவில் கொள்வோம்

உதயன் குழுமத் தலைவரும் பணியாளர்களும




**சாமி வரம் குடுத்தாலும் பூசாரி இடம் குடுக்கோணுமே? எண்டு பழைய ஆக்கள் சொல்லுவினம். மேல்மட்டத்தில இருக்கிறவை ஏதும் இரங்கினாலும்கூட அவைக்கு கீழ இருக்கிறவை செய்யிற அழிச்சாட்டியங்கள் கொஞ்சநஞ்சமில்லை. அப்பிடியான ஆக்களலால சில உருப்படியான திட்டங்களும் உருப்படாமலேயே போயிருக்கு.**

**இப்ப நாட்டில கடும் பொருளாதார நெருக்கடி. இப்பிடியே போனால் சாப்பாட்டுக்கு எல்லாரும் தாளம் தான் போடோணும். அதை தடுக்கிறதுக்காக விதவிதமான திட்டங்களை நடைமுறைப்படுத்த வெளிக்கிட்டிருக்கினம். அதில ஒண்டுதான் சமுர்த்திக்காரருக்கு மரக்கறி நாற்றுகள் குடுக்கிற திட்டம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் காசில்லாமல் இப்பிடி மரக்கறி நாற்றுகளைக் குடுத்து, வீடுகளில வளர்த்தால் , எல்லா வீடுகளிலையும் மரக்கறிப் பஞ்சம் வராதெல்லோ. திட்டமென்னவோ கேக்க நல்லாத்தான் இருக்கு. ஆனால் அதைச் சரியா நடைமுறைப்படுத்த வேணுமே?**

**நேற்று வடமராட்சியில இப்பிடி மரக்கறி நாற்றுக்களை சமுர்த்திக்காரருக்கு அந்தப் பகுதிக்குப் பொறுப்பான சமுர்த்தி உத்தியோகத்தர் (ஜே/392) குடுத்திருக்கிறார். அதைவாங்க விடிய ஒருத்தர் போயிருக்கிறார். ஆனால் அவர் சமுர்த்திக்காரர் இல்லை. அவரின்ர அம்மாதான் சமுர்த்தி எடுக்கிறவா. அவாவுக்கு உடம்பு ஏலாதெண்டு அவர் போயிருக்கிறார். ஆனால் அவருக்கு தர ஏலாதெண்டு சொல்லி, சமுர்த்திக் 'கார்ட்டை' எடுத்துக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறார் சமுர்த்தி ஒப்பீஸர். அவரும் வீட்டை போய் சமுர்த்திக் கார்ட்டை எடுத்தந்து குடுத்து. நாற்றுகளைத் தாங்கோ எண்டு கேட்டிருக்கிறார். உடன ஒரு கடுதாசிப் பேப்பரில நாற்றுகளைச் சுத்தி குடுத்திருக்கினம். வீட்டை போய் அந்தக் கடுதாசியைக் கழற்றி, நாற்றுக்களை நடுவமெண்டு வீட்டுக்காரர் வெளிக்கிட்டால், எல்லா நாற்றும் கருவாட்டைவிட மோசமாக் காய்ஞ்சு, கருகிப் போய்க் கிடந்திருக்குது.**

**"உப்பிடிக் காய்ஞ்ச நாற்றை நட்டுத்தானோ நாட்டை வளப்படுத்தப் போயினம்? சனத்துக்கு காசில்லாமல் குடுக்கிறதெண்டதுக்காக இப்பிடி அநியாயவேலை செய்யக்கூடாது. காய்ஞ்ச நாற்றுக்களை தாறதை விட அதைத் தராமலே விட்டிருக்கலாமே? இப்பிடிக் காய்ஞ்ச நாற்றுக்களை தரத்தானோ கார்ட்டை கொண்டா, அதைக் கொண்டா , இதைக்கொண்டா எண்டு அலைக்கழிச்சவை?" எண்டு பாதிக்கப்பட்டவை கேக்கினம். அந்தக் குடும்பத்துக்கு மட்டுமில்லை அப்பிடி அந்த ஏரியாவில இன்னும் சிலருக்கு இப்பிடிக் 'நாற்றுக் கருவாடு' தான் குடுபட்டிருக்கு.**

**இதையெல்லாம் உரிய அதிகாரிமார் தட்டிக் கேக்கமாட்டினமோ? இல்லாட்டி அலுவல் முடிஞ்சால் சரி எண்டிட்டு அவையும் தங்கட வேலையைப் பாக்கப்போயினமோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெருப்பாகி நிமிர்வான் உதயன்!

**2006** ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி. மறுநாள் சர்வதேச ஊடக சுதந்திர தினம். இருளுக்குள் தன்னைப் போர்த்திக் கொண்டு உறங்குநிலைக்கு சென்று கொண்டிருந்த யாழ் . நகரத்தை 'சடசட' என எழுந்த வேட்டொலிகள் திடுக்கிட வைத்தன. என்னவென்று எட்டிப் பார்க்கவும் பயம். வீட்டுக்குள் முடங்குவதே உயிருக்கு உத்தரவாதம் என்பதால் வேட்டொலிகளைக் கேட்டுவிட்டு எல்லோரும் வீடுகளுக்குள் அடங்கிப் போய் விட்டனர்.

வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட இடம் 'உதயன்' அலுவலகம். போர் மேகங்கள் கருக்கட்டியிருந்த அந்தக் காலத்தில் துணிந்து நின்று உண்மைகளை உரக்கச் சொன்னவன் 'உதயன்'. அதிகாரத்தின் உச்சத்தில் இருந்தவர்களுக்கு அது கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது. 'உதயனின்' குரல்வளையை அறுத்துவிட்டால் தங்கள் அட்டூழியங்கள் உலகின் காதுகளுக்கு எட்டுவதைத் தடுக்க முடியும் என்று எண்ணியவர்கள். அதைச் செயற்படுத்தவும் துணிந்தனர்.

இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு இருந்த காலம். 6 மணியுடன் ஊர் அடங்கிவிடும். இரவுவேளையில் வீதிகளில் விலங்குகள் கூடச் செல்ல முடியாத நிலைமை. இரவு 7.15 மணியளவில் முகங்களைக் கறுப்புத் துணியால் மறைத்தபடி நால்வர் துப்பாக்கிகளோடு உதயன் அலுவலகத்துக்குள் நுழைந்தனர். அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை துப்பாக்கி முனையில் பணயமாக்கிக் கொண்ட அந்தக் காடையர்களின் கண்களில் முதலில் சிக்கியவர் விற்பனை முகாமையாளர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்).

அலுவலகத்தில் கதிரையில் அமர்ந்திருந்த அவர் மீது எவ்விதக் கேள்விகளும் இன்றி துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ச்சப்பட்டன. துடிப்பு மிக்க அந்த இளைஞனின் இதயத் துடிப்பைக் கணநேரத்துக்குள் துப்பாக்கிச் சன்னங்கள் காவு வாங்கிக் கொண்டன. அந்தக் கதிரையில் சரிந்தார் அவர். அதன்பின்னரும் அவர்களின் வெறி அடங்கவில்லை. அலுவலகத்தின் உட்பகுதிக்குள் முன்னேறியவர்களின் கண்களில் முதலில் தென்பட்டவர்கள், பத்திரிகை மடிக்கும் பணியிலிருந்தவர்கள். அவர்களை நிலத்தில் அச்சுறுத்திப் படுக்க வைத்தனர் அந்தக் காடையர்கள். நிலத்தில் வீழ்த்தப்பட்டிருந்த ஒருவர் அச்சத்தால் சற்றுத் தலையை உயர்ந்த அவர் நெஞ்சில் பாய்ச்சப்பட்டன துப்பாக்கி ரவைகள். ரஞ்சித்குமார் ராஜரட்ணம் என்ற இளைஞர் அந்த இடத்திலேயே துடிதுடித்து உயிர்விட்டார். சிலநாள்களுக்கு முன்னரே இல்லற பந்தத்தில் இணைந்திருந்த அவர் மணமாலை வாடுவதற்கு முன்னரே பிணமாகிப் போனார்.

பெருக்கெடுத்த இரத்த ஆற்றை மிதித்தபடி, இன்னும் சிலரைக் காயப்படுத்திவிட்டுக் கொக்கரித்துக் கொண்டு ஆசிரிய பீடத்தை நோக்கிய முன்னேறியது அந்தக் காடையர் குழு. அலுவலகத்துக்குள் கேட்ட வெடி ஓசைகள், மரண ஓலங்களால் எச்சரிக்கையடைந்த ஆசிரியபீடத்தினர் பாதுகாப்பான இடமொன்றில் பதுங்கிக்கொண்டனர். பெரும் வேட்டைக்கான எதிர்பார்ப்புடன் வந்த அந்தக் காடையர்களுக்கு, ஆசிரிய பீடத்தில் எவருமில்லாது பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. அங்கிருந்த கணினிகள், பொருள்கள் மீது அவர்கள் தங்கள் வெறியைத் தீர்த்துக் கொண்டனர். துப்பாக்கிச் சன்னங்களால் கணினிகளும், பெறுமதியான பொருள்களும் சல்லடையிடப்பட்டன.

அதிகாரத்தில் இருந்தவர்களாலும், அதிகாரத்தில் இருந்தவர்களுடன் ஒட்டிக்கொண்டிருந்தவர்களாலும் உதயன் மீதும், அதன் பணியாளர்கள் மீதும் பல தடவைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. உதயன் அலுவலகத்தில் புகுந்து உயிர்குடித்த சம்பவம் அப்போதுதான் முதன்முறையாக நடந்தேறியது. 20 நிமிடங்கள்வரை உதயன் அலுவலகத்துக்குள் இந்தக் கொலைவெறியாட்டம் தொடர்ந்தது. உதயனின் கதை முடிந்தது என்றெண்ணி எக்காளமிட்டு நகர்ந்தனர் அந்தக் காடையர்கள். கருத்தைக் கருத்தால் எதிர்க்கத் துணிவற்ற கோழைகளின் செயலால் உலகமே அதிர்ந்தது.




### இரத்தத்தின் பிசுபிசுப்போடு வெளிவந்தது பத்திரிகை

உதயனின் கதை முடிந்தது என்றெண்ணியவர்களின் கன்னத்தில் மறுநாள் காலைப் பொழுது பளார் என்று அறைந்தது. இரத்தத்தின் பிசுபிசுப்போடு, மரணங்கள் தந்த வலி சுமந்த போதும், நெஞ்சுறுதியுடன் மறுநாள் உதயன் வழமைபோன்று ஊரெங்கும் உதித்தான். நெருக்குதல்கள், மிரட்டல்கள், தாக்குதல்கள், அழிப்புக்கள், உயிர்க்கொலைகள் என அனைத்தையும் ஏந்திக்கொள்ள நேர்ந்தாலும், தன் இலட்சியத்தில் இருந்து உதயன் ஒருபோதும் தடம்புரண்டதில்லை.

மக்களின் குரலாக 36 ஆண்டுகளாக ஓங்கி ஒலிக்கும் உதயன், அநீதியைச் சுட்டெரிக்கும் பெருநெருப்பு. அதைச் சுட்டுப் பொசுக்க நினைப்பது, முன்னரைவிட வீரியத்துடன் சுவாலை வீசி எரிய வைக்குமே தவிர, ஒருபோதும் அணைத்து விடாது.

**என்றென்றைக்கும்,**
**எது நேர்ந்த போதும்,**
**நெருப்பாகி...**
**நெருப்பாகி...**
**நிமிர்வான் உதயன்!**

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு ஆராய்வு!

யாழ்ப்பாணம், மே 2

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெற்றது.

இதன்போது வடக்கு, கிழக்கு சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து 'ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்புக்கான' ஒருங்கிணைப்புக் குழுவைத் தெரிவுசெய்தனர்.

இதில் வடக்கு- கிழக்கு சார்ந்த சைவ ஆதீன முதல்வர்கள், கத்தோலிக்க குரு முதல்வர்கள், சமய, சமூக, தொழிற்சங்க பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பல்துறை ஆளுமைசார் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களைப் பரிமாறினர்.



தமிழ்த் தேசியம் சார்ந்து பொருளாதார நெருக்கடியை எவ்வாறு அணுகுவது, தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளை எவ்வாறு கொண்டு சேர்ப்பது, பொருளாதாரப் பிரச்சனைக்கு மூலவேர் காரணமான தமிழ் மக்களின் மீதான அடக்குமுறைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள சிங்கள மக்களிடையே மனமாற்றத்தைத் தூண்டல், சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் என்ற பல கோணங்களில் கருத்துக்களை முன்வைத்தனர். மேலும் தொடர் கலந்துரையாடல்கள் வாயிலாக தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு 'உங்களை நாங்கள் புரிந்து கொள்கின்றோம், எங்களை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்' என்ற தொனிப்பொருளில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஒருமித்த குரலாகக் கொண்டு சேர்க்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-14,27,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உரிமைகள் ஏற்கப்பட்டாலே இலங்கைக்கு மீட்சி கிட்டும்!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மே 2

இலங்கைத்தீவில் நாங்கள் நாங்களாக (தமிழர்கள்) வாழுகின்ற உரிமையும், நீங்கள் நீங்களாக (சிங்களவர்கள்) வாழுகின்ற உரிமையும் எப்போது இருக்கின்றது என்பதை சிங்கள தேசம் உணர்ந்து கொண்டால் மாத்திரமே பொருளாதாரத்திலும் அரசியலிலும் வெற்றிகாண முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி - இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் மறைந்த முன்னாள் அதிபர் கனகராஜா மகேந்திரராஜாவின் நினைவு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்பகுதியில் சிங்கள மக்கள் தெருக்களில் இறங்கிப் போராடுகிறார்கள். பச்சிளம் பாலகர்கள் கூட வீதிகளில் இறங்கிப் போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் உங்களுடைய பங்கு என்ன? என்று என்னிடம் ஒருவர் கேட்டிருந்தார்.

அவருக்கு நான், 'காணாமலாக்கப்பட்ட எத்தனையோ பேரை இன்னும் தேடுகின்றவர்களாக நாம் இருக்கின்றோம். அவர்களைத் தினம்தினம் எதிர்பார்த்து அவர்களின் உறவுகள் கலங்கிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு உறவுகளைத் தொலைத்துவிட்டு பரிதவித்துக் கொண்டிருக்கும் உறவுகளுக்கு இந்த சிங்களச் சகோதரர்கள் என்ன பதில் சொல்லப்போகின்றார்கள்?

சிங்கக் கொடியின் கீழ் எங்களையும் ஏற்று அரவணைக்கும் எண்ணத்தை சிங்களச் சகோதரர்கள் கொண்டுள்ளார்களா? அல்லது எங்களையும் இந்த நாட்டினுடைய மக்களாக சிங்கள மக்கள் ஏற்றுள்ளார்களா? அதைக்கூட வெளிப்படையாகச் சொல்லுகின்ற ஆற்றலை சிங்களச் சகோதரர்கள் கொண்டுள்ளார்களா? தமிழர்களுடைய வரலாற்றுத் தாயகம் வடக்கு - கிழக்கு என்று சொல்வதற்கு ஏன் இன்னும் சிங்களச் சகோதரர்களால் முடியவில்லை? என்று கேட்டேன்.

நாங்கள் நாங்களாக (தமிழர்கள்) இந்த மண்ணிலே வாழுகின்ற உரிமையும், நீங்கள் நீங்களாக (சிங்களவர்கள்) வாழுகின்ற உரிமையும் இருக்கின்றது என்பதை நீங்கள் (சிங்களவர்கள்) எப்போது வெளிப்படையாகப் பேசவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ துணிகின்றீர்களோ அன்றுதான் இந்த நாட்டுக்கு அனைத்து வகையிலும் மீட்சியென்பது கிட்டும் -என்றார். (ம-113)

## மோசமான பொருளாதார நெருக்கடிக்குள்ளும்

# சுதந்திரதின விழாவுக்கு ரூ.95 மில்லியன் செலவு

**கொழும்பு, மே 2**

**நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், இந்த ஆண்டு நடத்தப்பட்ட சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்காக அரசாங்கம் சுமார் 95 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது என்று தகவல் அறியும் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்துகின்றன.**

கடந்த 5 ஆண்டுகளில் சுதந்திரதின விழாவுக்குச் செலவிடப்பட்ட மிகப்பெரிய தொகை இதுவாகும். சுதந்திரதின நிகழ்வுகளுக்காக 94.7 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

2021ஆம் ஆண்டு சுதந்திரதின விழாவுக்குச் செலவிடப்பட்ட தொகையைவிட, இந்த ஆண்டு விழாவுக்குக் கிட்டத்தட்ட 15 மில்லியன் ரூபா மேலதிகமாகச் செலவிடப்பட்டுள்ளது.

அரச தொழிற்சாலைத் திணைக்களத்தால் மேடை அமைப்பதற்கும், கொடிக்கம்பங்களை விநியோகிப்பதற்கும், சிவப்பு கம்பளத்தை வழங்குவதற்கும் செலவிடப்பட்ட 37 மில்லியன் ரூபாவும், கலாசார கண்காட்சி அணிவகுப்பை நடத்துவதற்குப் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் செலவிடப்பட்ட 19 மில்லியன் ரூபாவும் உள்ளடங்கும்.

நடமாடும் கழிவறை வசதிகளுக்காக 15 மில்லியன் ரூபாவும், விருந்தோம்பல் செலவுகளுக்காக 2 மில்லியன் ரூபாவும், டிஜிற்றல் திரைக்கு ஒரு மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

மின்சாரத்துக்காக 11 மில்லியன் ரூபாவும், நீர்வசதிக்காக 2 மில்லியன் ரூபாவும், ஒலி அமைப்புக்கள் மற்றும் கதிரைகளுக்கு 2 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளன. தகவல் அறியும் விண்ணப்பம் பெப்ரவரி 7ஆம் திகதி உள்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கான பதில் அமைச்சின் அதிகாரி அபேவர்தனவால் ஏப்ரல் 20ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மதுபான வருமானத்தை இழக்கவுள்ள அரசாங்கம்

கொழும்பு, மே 2

எதிர்காலத்தில் மதுபானத்தின் மூலம் கிடைக்கும் வரி வருமானத்தை அரசாங்கம் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ளூர் மதுபான உற்பத்திக்குத் தேவையான எதனோல் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாடே இதற்குக் காரணம் என நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த வரி வருமானம் இழக்கப்பட்டால் அரச ஊழியர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்குவது உட்பட பல செலவுகளைச் செய்ய முடியாத நிலை ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

தற்போது, நாட்டிலுள்ள ஐந்து முக்கிய மதுபான ஆலைகளுடன் இணைந்து உள்ளூர் மதுபானங்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்த தனியார் நிறுவனங்களும் அவற்றின் உற்பத்திக்கான கட்டுப்பாடுகள் தொடர்பாக அவ்வப்போது எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. (எ-இ)



மாமனிதர் சிவராமின் (தராகி) 17ஆவது ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-26)

# அரசியல் சீர்திருத்தங்கள் மக்களின் எதிர்பார்ப்பல்ல

## ஐ.தே.க. சுட்டிக்காட்டு



கொழும்பு, மே 2

பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள மக்கள் அதற்கான தீர்வையே கோருகின்றனர். அவர்கள் அரசமைப்புச் சீர்திருத்தங்களை எதிர்பார்க்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவிக்கையில்;

அரசமைப்பின் 19, 20 அல்லது 21ஆவது திருத்தத்தை மக்கள் விரும்பவில்லை. மாறாக, வாழ்வதற்கான உரிமையை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். போராட்டத்தின்போது சில அரசியல் கட்சிகள் தங்கள் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்த முயற்சிக்கின்றன. மக்களுக்கு எரிவாயு, எரிபொருள், உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் இன்னும் சீராக வழங்கப்படவில்லை. முன்னாள் பிரதமர் தனது பதவிக்காலத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கான நிலையான விலையை உறுதி செய்தார்-என்றார். (க-இ)

# சீனா ஒத்துழைக்காவிட்டால் இலங்கைக்கு மேலும் நெருக்கடி

## பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை

கடன் விவகாரத்தில் சீனா ஒத்துழைக்காவிடில், இலங்கைக்கு மேலும் நெருக்கடிகள் ஏற்படும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அரசியல் நெருக்கடியும் மேலோங்கியுள்ளது. இந்திய நிதியுதவிகளும் இந்த மாதத்துடன் முடிவடைகின்றமையால், நாட்டின் உண்மையான பிரச்சினைகள் இனிமேல் தான் ஆரம்பாகும். இலங்கையின் இறுதி எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்ற சர்வதேச நாணயநிதியத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், சீனக் கடன்களை மீளச் செலுத்துவதற்கான திட்டம் குறித்து அவசரமாகக் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும் என்று நட்பு நாடுகள் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளன.

இந்தியாவிடமிருந்து கோரப்பட்ட எரிபொருளுக்கான சலுகைகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. எஞ்சியிருப்பது உரம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான கோரிக்கையாகும். அதேபோன்று உலக வங்கியும் மற்றும் நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில் நிதியை விடுவிக்கத் தீர்மானித்துள்ளது.

இலங்கையின் இறுதி நம்பிக்கையாகியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு கடனை மீளச் செலுத்தும் இயலுமை தொடர்பான அறிக்கையை இன்னும் தயார்ப்படுத்தவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை செல்வதை சீனா விரும்பவில்லை என்பதே உண்மை. ஆனால், சீனாவின் ஒத்துழைப்பு இன்றி சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதும் சாத்தியமற்றதாகும்- என்றுள்ளனர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

"முன்னேறும் சந்தர்ப்பங்கள்
தாமாக வருவதில்லை;
அவை உருவாக்கப்படுகின்றன."
—ஆரிஸன் ஸ்வெட்மார்டன்


# இயற்கையும் நீதி செய்யும்

உலக ஊடக வரலாற்றில் இன்று கறுப்புநாள். 16 வருடங்களுக்கு முன்னர் இதேநாளில்தான் உலகின் மிகப்பெரிய ஊடகப் படுகொலை இருளின் துணையோடு நிகழ்த்தப்பட்டது. தமிழ்த் தேசியப் பாதையில் தடம்மாறாது பயணிக்கும் உதயன் ஊடகப் பணிமனைக்குள் 2006ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் புகுந்த ஆயுத தாரிகள் நடத்திய கொலை வெறியாட்டத்தில் இரு உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. உதயன் விற்பனை முகாமையாளரான பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாசன் மற்றும் விநியோக ஊழியரான ரஞ்சித்குமார் ராஜரட்ணம் ஆகிய இருவரும் கொலைகாரத் துப்பாக்கிகளின் பசிக்கு இரையாகினர். கணினிகள், அச்சியந்திரம் என்று எதுவுமே ஆயுத தாரிகளின் கொலைவேட்டையில் தப்பவில்லை. அலுவலகம் முழுதையும் துப்பாக்கி ரவைகளால் சல்லடையிட்ட பின்னரே ஆயுதக்குழு அகன்றது. விடிந்தால் (மே 3 ஆம் திகதி) உலக ஊடக சுதந்திர தினத்தை கடைப்பிடிக்க, முழு உலகும் தயாராகிக் கொண்டிருக்கையிலேயே இந்த ஊடகப் பெரும்படுகொலை நடந்தேறியிருந்தது.

எத்தனையோ ஊடகங்கள் அப்போதும் இருக்கையில் ஏன் உதயன் மட்டும் இலக்குவைக்கப்பட்டது? ஏனென்றால் உதயன் மட்டுமே தமிழ் மக்களின் உரிமைக்குரலாக, தளராத துணிவோடு உலகெங்கும் உண்மையை உரத்துச் சொன்ன ஊடகம். பேசாப்பொருளை துணிந்து பேசிய பத்திரிகை. அரசாங்கத்தினதும், அதன் அடிவருடிகளினதும் அக்கிரமங்களையும், குருதி குடிக்கும் போரால் மக்கள் சந்திக்கும் பேரவலத்தையும் உதயன் வெளிப்படுத்தி நின்றதால், நிலைகுலைந்து போன அதிகாரவர்க்கம், உதயனுக்கு ஒட்டுமொத்தமாக சமாதிகட்ட முடிவெடுத்தது. அதிகாரத்தின் வேட்டைநாய்கள் உதயன் மீது பாய்ந்தன. இரு உயிர்களைக் குதறிக் கொன்றுவிட்டு தப்பியோடியும் விட்டன. இந்தக் கொலைவெறித்தாக்குதல் நிகழ்ந்து 16 வருடங்கள் கழிந்துள்ளபோதும், இதன்போது காவு கொள்ளப்பட்ட உயிர்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை என்பது தான் ஆகப்பெரிய துரதிர்ஷ்டம்.

இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பது ஊரறிந்த ரகசியம். 'உதயன் மீது எமது கட்சிதான் தாக்குதல் நடத்தியது. அந்தத் தாக்குதலை நடத்தியவர்களில் சிலர் இப்போது வெளிநாட்டில் இருக்கின்றனர். ஒரு சிலர் இலங்கையில் உள்ளனர்' என்று ஜனநாயகப் பாதைக்கு திரும்பிவிட்டதாகக் கூறிக்கொண்ட ஒரு கட்சி மீது, அதே கட்சியில் பல வருடங்களாக இயங்கிய ஒருவர் இரண்டுமுறை பகிரங்க ஊடகச் சந்திப்புக்களில் உண்மையைப் போட்டுடைத்திருந்தார். அந்த நபரை விசாரணை செய்தாலேயே, உதயனில் நிகழ்த்தப்பட்ட கொலையின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்தியிருக்கலாம். ஆனால், அதைச் செய்ய அரசாங்கம் விரும்பவில்லை. ஏதேனும் ஆர்ப்பாட்டம், பேரணி என்றால் மட்டும் அதில் பங்குபெறுபவர்களை வளைத்து, வளைத்து படம் எடுத்து, பின்னர் அவர்களின் வீடுகளுக்குச் சென்று மிரட்டும் பொலிஸாரோ, புலனாய்வுப் பிரிவினரோ அந்தப் பகிரங்கக் கொலை ஒப்புதல் வாக்கு மூலம் தொடர்பில் அலட்டிக் கொள்ளவேயில்லை. அதன் மூலம் உதயனின் நடத்தப்பட்ட கொலைவெறித்தாக்குதலில் அரசாங்கத்துக்கும் பங்குண்டு என்பது வெட்ட வெளிச்சமாகியது. ஆனாலும், அதிகாரம் ஆசைப்பட்டது போல உதயனின் குரல்வளையை அவ்வளவு லேசாக நசுக்கிவிட முடியவில்லை. முன்னரைக் காட்டிலும் இன்னும் வீரியத்தோடுதான் உதயன் ஊடகப்பணியாற்றியதே தவிர அஞ்சி, நடுங்கி, அடி பணிந்துவிடவில்லை. இந்த ஓர்மமும், அர்ப்பணிப்பும், மக்களின் ஆதரவுமே உதயனின் துணிச்சலான இருப்புக்கு மூலகாரணம்.

அதன்பின்னரும் ஏனைய ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் இலங்கையில் வன்முறைகள் தொடரவே செய்கின்றன. 'ஊடகங்களைக் கட்டுப்படுத்த நினைப்பவன் உண்மையில் மக்களையே கட்டுப்படுத்த நினைக்கிறான்' என்று நோயம் சோம்ஸ்கி சொன்னது இன்று நிஜமாகிக் கொண்டிருக்கிறது. முதலில் ஊடகங்கள் மீது பாய்ந்தவர்கள், இப்போது தங்கள் சொந்த இன மக்களின் குருதியையும் குடிக்க முனைந்ததன் விளைவாலேயே, அதே சொந்த இனமக்களால் அதிகாரத்தை ஆயுள்வரை இழக்கும் அபாய நிலையில் நிற்கிறார்கள். நீதியை நீங்கள் வழங்காவிடின், இயற்கையே நீதியை வழங்கிவிடும். ஆட்சியின் இறுதிப் புள்ளியில் இருக்கும் இப்போதைய அதிகாரத் தரப்புக்கும், அதற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் ஒட்[illegible]களுக்கும் இந்த வார்த்தைகள் நினைவில் இருக்க[illegible]




# கடற்படைப்படகு மோதி மீனவரின் படகு சேதம்!

## வடமராட்சியில் சம்பவம்




**யாழ்ப்பாணம், மே 2**

**கடற்படைக்குச் சொந்தமான படகு மோதியதில், பருத்தித்துறை- சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்கத் தலைவரின் படகு கடும் சேதமடைந்துள்ளது.**

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, தமது படகுக்கு மேலாகக் கடற்படையினரின் படகு ஏறிச்சென்றது என்று பருத்தித்துறை, சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார். படகும் இயந்திரமும் கடும் சேதங்களுக்கு உள்ளாகியிருந்தபோதிலும், அதில் இருந்த இரு மீனவர்களும் காயங்களின்றித் தெய்வாதீனமாகத் தப்பியுள்ளனர்.

இதையடுத்து, கடற்படையின் படகுமூலம் குறித்த படகு கரைக்கு இழுத்து வரப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-26,27)

# இந்தியாவிடமிருந்து மருத்துவ உதவிகள்



கொழும்பு, மே 2

இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக இந்திய அரசால் 15 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துப்பொருள்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கொழும்பு துறைமுகத்தில் வைத்து அமைச்சர் சன்ன ஜயசுமனவிடம் இந்த மருந்துத் தொகுதியைக் கையளித்தார். (ச-இ)

நாளை

03.05.2022
செவ்வாய்க்கிழமை
சித்திரை 20

சுபநேரம் : 10.26 - 11.56
ராகுகாலம்: 02.56 - 04.26

ரம்ழான் பெருநாள் | அக்ஷய திருதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNITED NATIONS

# ஆப்கானிஸ்தான் தாக்குதல்களுக்கு ஐ.நா. கண்டனம்

நியூயோர்க், மே 2
ஆப்கானிஸ்தானில் பொதுமக்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றமைக்கு ஐ.நா. அமைப்பு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.
ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் பொதுமக்களின் வீடுகள், வழிபாட்டிடங்கள், பள்ளிகள் போன்ற இடங்களில் அடுத்தடுத்து குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன.
இந்தத் தாக்குதல்களில் அதிகளவானோர் பலியாகியுள்ளனர்.
இந்த நிலையில் ரம்ழான் பண்டிகையையொட்டி பொதுமக்கள் மீது நடத்தப்படும் இதுபோன்ற தொடர்ச்சியான தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என ஐ.நா. அமைப்பு கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது. (ச-இ)



ரஷ்யப் படைகளின் தொடர் தாக்குதலால் உக்ரைனின் துறைமுக நகரமான மரியுபோல் உருக்குலைந்து இருப்பதைக் காட்டும் செயற்கைக்கோள் புகைப்படங்களை அமெரிக்க விண்வெளி தொழில்நுட்ப நிறுவனமொன்று வெளியிட்டுள்ளது. (ச-இ)

# நியூஸிலாந்தில் ஒமிக்ரோன்

வெலிங்டன், மே 2
நியூஸிலாந்தில் முதன்முறையாக கொரோனா வைரஸின் உருமாறிய திரிபான ஒமிக்ரோன் பிஏ4 தொற்று கண்டறியப்பட்டுள்ளது என அந்நாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
வெளிநாட்டிலிருந்து நியூஸிலாந்து வந்தவருக்கே இந்த உருமாறிய ஒமிக்ரோன் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# சீனாவில் அடுக்குமாடிக் குடியிருப்பு இடிந்து வீழ்ந்து விபத்து

பீஜிங், மே 2
மத்திய சீனாவின் ஹுனான் மாகாணத்தில் குடியிருப்புக் கட்டடம் இடிந்து வீழ்ந்து 20 க்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ள நிலையில் 39 பேரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
விபத்தில் சிக்கி காயமடைந்தவர்களை மீட்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு சீன அதிபர் ஜி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார்.
இதுவரை எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என்றும், இடிபாடுகளிலிருந்து 5 பேர் மீட்கப்பட்டதாகவும் சீன அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பேரணியை தொடங்குக

## இம்ரான் அழைப்பு

லாகூர், மே 2
பாகிஸ்தான் பிரதமரான ஷபாஸ் ஷெரீப்புக்கு எதிராக பேரணியைத் தொடங்குங்கள் என ஆதரவாளர்களுக்கு இம்ரான் அழைப்பு விடுத்துள்ளார்.
பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான்கான் மீது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெற்று இம்ரான் அரசு கவிழ்ந்தது.
இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரான ஷபாஸ் ஷெரீப் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பதவியேற்றார்.
இந்த நிலையில் தனது ஆட்சிக் கவிழ்ப்புக்கு வெளிநாட்டு சதி இருப்பதாகத் தெரிவித்து, தலைநகர் இஸ்லாமாபாத் நோக்கி இம்மாத இறுதியில் பேரணி ஒன்றை மேற்கொள்ள ஆதரவாளர்களுக்கு இம்ரான்கான் அழைப்பு விடுத்துள்ளார். (ச-இ)



# மே 6 இல் காற்றமுத்த தாழ்வுநிலை

புதுடில்லி, மே 2
இந்தியாவின் தெற்கு அந்தமான் கடற்பகுதியில் எதிர்வரும் 6ஆம் திகதி காற்றமுத்த தாழ்வு உருவாகவுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
வங்கக்கடலின் தெற்கு அந்தமான் பகுதியில் எதிர்வரும் 4ஆம் திகதி ஒரு மேலடுக்கு சுழற்சி உருவாகும். இந்த மேலடுக்கு சுழற்சி 6ஆம் திகதி காற்றமுத்த தாழ்வுப் பகுதியாக மாறும். அதற்கு அடுத்த 24 மணி நேரத்தில் அது மேலும் தீவிரமடையவுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# உக்ரைன் நாட்டுக்குச் சென்ற நடிகை ஏஞ்சலினா ஜோலி

நியூயோர்க், மே 2
போர் பாதித்த உக்ரைன் நாட்டுக்கு பயணம் மேற்கொண்ட ஹொலிவூட் நடிகை ஏஞ்சலினா ஜோலி அங்குள்ள குழந்தைகளுடன் பேசி மகிழ்ச்சியூட்டியுள்ளார்.
ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர் மக்கள் பிரிவின் சிறப்பு தூதுவராக ஏஞ்சலினா ஜோலி செயற்படுகிறார்.
இந்நிலையில் உக்ரைன் லிவிவ் நகருக்குச் சென்ற அவர் போர் பாதித்த மக்களின் நிலைமைகள் குறித்து கேட்டறிந்து கொண்டதுடன் குழந்தைகளையும் உற்சாகப்படுத்தியுள்ளார். (ச-இ)

# கால்வாயில் ரிக்சா வண்டி கவிழ்ந்து 8 குழந்தைகள் சாவு!

கெய்ரோ, மே 2
எகிப்து தலைநகர் கெய்ரோவிலிருந்து வடக்கே பெஹைரா மாகாணத்திலுள்ள நகரில் தொழிற்சாலையில் பணியாற்றியவர்களை ஏற்றிச் சென்ற ரிக்சா வண்டி ஒன்று கால்வாயில் கவிழ்ந்ததில் 8 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
நைல் ஆற்றின் டெல்டா பகுதியில் நீர்ப்பாசனக் கால்வாய் வழியே செல்லும் போதே இந்தத் திடீர் விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் பயணித்த 12 பேரில் 8 குழந்தைகளே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நினைத்திருந்த செயல்களில் இன்று வெற்றி உண்டாகும். புதிய நட்பின் வழியே பலன்கள் அதிகரிக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்திருந்த நன்மை கிடைக்கும்.

**இடபம்:** இன்று குடும்பத்தில் திடீர்ச் செலவுகள் உருவாகும். விருந்தினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும். மனதில் இனம்புரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும்.

**மிதுனம்:** இன்று நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றி உண்டாகும். புதிய தொழில் தொடங்குவது பற்றிய சிந்தனை மேலோங்கும். சுப நிகழ்ச்சிகளுக்குத் திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** வாழ்க்கைத் துணையின் உடல்நலனில் கவனம் செலுத்துவீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். நல்ல செய்தி வரும்.

**சிம்மம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மற்றவர்கள் வழியே இன்று லாபம் உண்டாகும். துணிச்சலுடன் செயற்பட்டு நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** எதிர்கால நலன்கருதி சில செயல்களை மேற்கொள்வீர்கள். குடும்பத்தினர் [illegible] தியை நிறைவேற்ற முடியாமல் போகும்.

**துலாம்:** அந்நியர்கள் வழியே சில சங்கடங்கள் உண்டாகும். வாழ்க்கைத் துணையிடம் எதிர்பார்த்தவை நிறைவேறும். பிள்ளைகளின் நலனுக்காக மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும்.

**விருச்சிகம்:** உங்களுடைய முயற்சிகளில் இன்று வெற்றி உண்டாகும். உங்கள் செயல்களால் குடும்பத்தில் இன்று மகிழ்ச்சி ஏற்படும். உறவினர் வழியில் எதிர்பார்த்த நன்மையை அடைவீர்கள்.

**தனுசு:** சகோதர வகையில் நன்மை உண்டு. நட்பு வட்டம் விரியும். குடும்பத்தினருடன் இன்று கோயிலுக்குச் செல்வீர்கள். மனதில் குழப்பம் உண்டாகும். செயலில் தடை,தாமதம் ஏற்படும்.

**மகரம்:** பிறரால் ஏற்படும் சங்கடங்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர். உங்கள் எதிர்காலம் குறித்த சிந்தனை இன்று மேலோங்கும். வாழ்க்கைத்துணை வழியே நன்மை அடைந்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** உங்கள் கவனக்குறைவால் சில சங்கடங்களை சந்திக்க வேண்டி வரும். நீங்கள் எதிர்பார்த்த மகிழ்ச்சியை இன்று உங்கள் குடும்பத்தில் காண்பீர்கள். நினைத்ததை அடைவீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் நெருக்கம் அதிகரிக்கும். நிம்மதி கூடும் நாள். செலவு அதிகரிப்பதால் மனம் குழப்பமடையும். நிதானம் தேவை. எதிர்பார்த்திருந்தவரவு வீடு தேடிவரும். மகிழ்ச்சியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனாதிபதிக்கு வழங்கப்படும்

# நிறைவேற்று அதிகாரமே தமிழரைப் பாதுகாக்கும்!

## தயான் ஜயதிலகவின் கருத்து இது

**கொழும்பு, மே 2**

**தமிழர்களின் பாதுகாப்புக்கு சீர்திருத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் என்று கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**

நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாடு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்வாக்குச் செலுத்தவல்ல எதிரணி. தற்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்து கோஷங்களைப் எழுப்ப ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் பிரகாசமான எதிர்காலத்தைப் பறித்த கொள்கைகளும், அனைத்து அடிப்படைத் தவறுகளும் நாடாளுமன்ற ஆட்சி முறைமையின் கீழாகவே நடைபெற்றுள்ளன. நாடாளுமன்ற முறைமை மூலமே 1931 ஆம் ஆண்டு முதல் தேர்தல்களில் வாக்களித்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலைநாட்டு மக்கள் வாக்குரிமை மறுக்கப்பட்டனர்.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கை 1957ஆம் ஆண்டு இரத்துச் செய்யப்பட்டு கிழித்தெறியப்பட்டது. பொதுத் துறையில் தேர்ச்சிக்கான பரீட்சைகள், பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் முறை மாற்றம், பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் கையகப்படுத்தல், பல்கலைக்கழக நுழைவுத் தரப்படுத்தல் கொள்கை ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன.

ஜே.வி.பி.யின் கிளர்ச்சி மற்றும் சுதந்திரமான பொதுச்சேவை ஆணைக்குழு ஒழிக்கப்பட்டமை, அரச நிர்வாகத்தை அரசியல்வாதிகளுக்கு அடிபணியச் செய்யப்பட்டமை, சிங்களத்துக்கான அரசியலமைப்பு அந்தஸ்து, பௌத்த மதத்துக்கு முதலிடம் ஆகியனவும் ஏற்படுத்தப்பட்டன.

தமிழ்ப் புதிய புலிகளின் உருவாக்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் உருவாக்கம், வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஆகியனவும் நாடாளுன்ற முறைமையின் கீழேயே இடம் பெற்றன. இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி முறைமையின் கீழாக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலையக மக்களின் வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டது, அத்துடன் மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வுக்கான 13 ஆவது திருத்தச்சட்டம், விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை, 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத்திட்டம் போன்றன ஏற்படுத்தப்பட்டன.

ஆகவே, ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் முயற்சியானது பொருத்தமற்றது. மாறாக, எதேச்சாதிகார ஜனாதிபதி முறை சீர்திருத்தப்பட்டு நிறைவேற்று அதிகார முறைமை நீடிக்க வேண்டும் -என்றார்.

(க-இ)

---

## புதிய பட்ஜெட் அரசு ஆராய்வு

கொழும்பு, மே 2

எதிர்வரும் ஆண்டுக்கான புதிய வரவு-செலவுத் திட்டத்தை முன்வைப்பது தொடர்பில் அரசாங்கம் பேச்சு நடத்தி வருகிறது. இது தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படுகின்றது என்று நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வரும் நிலையில் 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை நடைமுறைப் படுத்த முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. தேசிய வருமானம் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அதை அதிகரிப்பதற்கு குறைக்கப்பட்ட வரிகளை மீண்டும் அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது - என்றார்.

(எ-இ)

---

## வங்கிமூலமான கொடுப்பனவை ஊக்குவிக்க நடவடிக்கை

கொழும்பு, மே 2

உத்தியோகபூர்வமற்ற வழிகள் மூலம் வழங்கப்படும் இறக்குமதிக்கான கொடுப்பனவுகளை கட்டுப்படுத்தவும், வங்கி முறையின் மூலம் மாத்திரமே இறக்குமதிக்கான கொடுப்பனவுகளை ஊக்குவிக்கவும் புதிய விதிமுறைகள் விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என மத்திய வங்கியின் ஆளுநரான கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலரில் ஹோட்டல்களில் பணம் செலுத்துவது தொடர்பான விதிமுறைகளும் தளர்த்தப்படும், இல்லையெனில் இது ஒட்டுமொத்த சுற்றுலாத் துறையையும் பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

---

## எரிபொருள் விநியோகத்தை கண்காணிக்க இராணுவம்!

### ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, மே 2

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக நாடு முழுவதும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பிரதான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து வெளியேறும் எரிபொருள் தாங்கி வாகனங்கள் உரிய முறையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை வந்தடைகின்றனவா என்பதை பரிசோதிப்பதற்காகவே இந்தக் கண்காணிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கு அமைய இராணுவம் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளது. அனைத்து எரிபொருள் தாங்கி வாகனங்களும் பிரதான எரிபொருள் களஞ்சியங்களில் இருந்து புறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட பகுதிகளின் கட்டளைத் தளபதிக்கு உடனடியாக அறிவிக்கப்படும். கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக இராணுவத் தளபதி இராணுவத்தினரின் குழுக்களை சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அல்லது வீதிகளுக்கு அனுப்புவார். அத்துடன் எரிபொருள் விநியோக ரயில்களின் பாதுகாப்புக்காக இராணுவம் மற்றும் விமானப்படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

(எ-இ)

---

## வாகன உதிரிப்பாகங்களுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு!



கொழும்பு, மே 2

நாடு முழுவதும் வாகன உதிரிப்பாகங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று போக்குவரத்து தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியே காரணம். சந்தையில் உதிரிப் பாகங்களின் விலை வேகமாக உயர்ந்துவிட்டது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. தற்போதைய நிலைமை காரணமாக தொழிலை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் தலைவர் தேவானந்த சுரவீர தெரிவித்தார்.

உதிரிப் பாகங்கள் பற்றாக்குறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மற்றொரு பகுதிப் பயணிகள் போக்குவரத்துத்துறை என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

உதிரிப் பாகங்கள் தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு காணாவிட்டால், ஒட்டுமொத்த போக்குவரத்துத் துறையும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் என போக்குவரத்து தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

(எ-இ)

---

## மீண்டும் வெடித்தது எரிவாயு அடுப்பு

யாழ்ப்பாணம், மே 2

மானிப்பாய்-பொன்னாலை வீதியில் உள்ள வீட்டில் நேற்றுமுன தினம் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

புதிதாக வாங்கிய லிட்ரோ எரிவாயுவை சமையல் செய்வதற்குப் பொருத்திய பொழுதே அது வெடித்துச் சிதறியுள்ளது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

(ம-14-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்கள் தீவிரமாகின்றன

## நவசமசமாஜக் கட்சி எச்சரிக்கை

**கொழும்பு, மே 2**

**அரசாங்கத்தின் வினைத்திறனற்ற முடிவுகளுக்கு எதிரான போராட்டங்கள் தற்போது அடுத்த கட்டத்துக்குச் சென்றுள்ளன. அவை தீவிரமாகின்றன என்று நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- தற்போதைய அரசாங்கத்தில் பலமான அமைச்சராக இருந்த அமெரிக்கப் பிரஜை ஒருவர், ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட்டு நாட்டை வங்குரோத்து அடையச் செய்துள்ளார். டொலர் நெருக்கடியால் ஏழைகள் மட்டுமல்லாது அனைத்து வர்க்கத்தினரும் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எந்தக் காத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அரசாங்கத்தின் இந்தக் கையாலாகாத்தனத்துக்கு எதிராக இடம்பெற்று வந்த மக்கள் போராட்டங்கள் தற்போது அடுத்த கட்டத்துக்குச் சென்றுள்ளன. ஹர்த்தால், பணிப்புறக்கணிப்பு போன்ற தீவிர நிலைக்கு போராட்டங்கள் மாறிவருகின்றன -என்றார். (க-இ)

# சட்டவிரோதமாக எரிவாயு விற்பனை

## இருவர் கைது

கொழும்பு, மே 2

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் எரிவாயுவை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராஜகிரிய - மிரிஹானப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 12 லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை மேலதிக விசாரணைக்காக நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க-இ)

# இலங்கையில் விசா அனுமதியின்றி தங்கியிருந்தவர் கைது

நுழைவுவிசைவின்றி இலங்கையில் தங்கியிருந்த 25 வயதுடைய இந்தியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஹற்றன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஹற்றன் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ய-இ)

# துப்பாக்கியுடன் பெண் கைது

கொழும்பு, மே 2

கஹட்டகஸ்திகிலிய, பலுகெடுவெள பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபரான குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ரி-56 துப்பாக்கி மற்றும் 184 தோட்டாக்கள் உள்ளிட்ட வெடிபொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் அதேபகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

### இரு வருடங்களின் முன் வெளியிடப்பட்ட

# ‘புத்தனின் அயோக்கியத்தனம்’ நூல் தொடர்பில் விசாரணை!

கொழும்பு, மே 2

‘புத்தனின் அயோக்கியத்தனம்’ என்ற பெயரில் சிங்களத்தில் நூலொன்றை எழுதி வெளியிட்ட சம்பவம் தொடர்பாக, பிரபல சிங்கள மொழி ஆசிரியரான உபுல் சாந்த சன்னஸ்கல மற்றும் ஸ்ரீநாத் சத்துரங்க ஆகியோரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உபுல் சாந்த சன்னஸ்கல, கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்றுவரும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவர். இவர், தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

இந்த நிலையில் இரு வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றை அடிப்படையாகக்கொண்டு தற்போது நீதிமன்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 20ஆம் திகதி விசாரணைக்காக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு இருவருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (க-இ)

# இரசாயன உரங்களுக்கு விசேட விலைச் சூத்திரம்

கொழும்பு, மே 2

இரசாயன உரங்களை இறக்குமதி செய்கின்ற நிறுவனங்களுக்கு விசேட விலைச் சூத்திரம் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அத்துடன் பெரும்போகத்துக்காக யூரியா உள்ளிட்ட உரங்கள் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# பொலிஸார் மீது கடும் தாக்குதல்

## பம்பலப்பிட்டியில் சம்பவம்

கொழும்பு, மே 2

கொழும்பு, பம்பலப்பிட்டியில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோத்தர்கள் மீது ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முச்சக்கரவண்டி ஒன்றை அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் தடுத்து சோதனை செய்தபோதே குறித்த நபர் தாக்கியுள்ளார்.

அதன்போது அங்கு சென்ற மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தரும் அவரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நிலையில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# சட்டவிரோத சிகரெட்டுகள் இலங்கையில் தாராளம்

## ஆய்வில் தகவல்



கொழும்பு, மே 2

இலங்கையில் பயன்படுத்தப்படும் சிகரெட்டுகளில் 21 வீதமானவை சட்டவிரோதமானவை என ஆய்வொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 56 வீதமான மக்கள், கொரோனாத் தொற்றுப் பரவுவதற்கு முன்னரே சட்டவிரோதப் புகையிலைப் பொருள்களை உட்கொண்டதை ஒப்புக்கொண்டுள்ளனர் என்று அந்த ஆய்வு கூறுகின்றது.

சட்டவிரோதப் புகையிலைப் பயன்பாடு நீண்ட கால சவாலாக உள்ளது. கொள்கை வகுப்பாளர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும். தேசிய சுகாதார இலக்குகளை அடைவதற்கும், வருவாயை அதிகரிப்பதற்கும் மற்றும் சட்டவிரோதப் புகையிலை சந்தையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் பரந்த நடை[illegible] பின்பற்றுகிறது. இதற்கு ஆராய்ச்சி [illegible] அவசியம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சமத்துவமும்...*

இந்நாளின் எழுச்சியும் ஆகும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளதாவது:- சமகாலத்தில் இலங்கைத்தீவு எதிர்நோக்கியுள்ள டொலர் நெருக்கடி, பணவீக்கம், பொருளாதாரச் சுமைகள், உயர்ந்த வாழ்க்கைச் செலவினம், சரிந்துசெல்லும் உற்பத்தித்திறன் மற்றும் மூடப்பட்டுள்ள சர்வதேச சந்தைகள் என்பவற்றின் அடிவிளைவுகள், கடந்த 30 வருடகாலப் போரின் விளைவுகளே அன்றி வேறில்லை எனலாம். தமிழ்த்தேசிய இனத்தின் நீதியான அபிலாஷைகளை ஏற்கமறுத்து, முதிர்ச்சியற்றதும், அரசியல் முகாமைத்துவத் திறனற்றதுமான முடிவுகளால் சர்வதேச வல்லரசுத்தனங்களுக்கு நிகரான போரை எமது மக்கள் எதிர்கொண்டனர். அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட அவலங்கள் சர்வதேச வரலாற்றில் எங்கும் பார்த்திருக்க முடியாதவை, பதிந்திருக்க முடியாதவை. அத்தகைய இன அழிப்பு ஒன்றுக்காகப் பெறப்பட்ட பல்லாயிரம் கோடி கடன் பணத்தின் விளைவே இன்றைய ஆட்சி அதிகார சீர்குலைவுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

விசேடமாக, போருக்குப் பின்னர் சர்வதேச சமூகத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஜெனிவாத் தீர்மானங்களைப் புறம்தள்ளியமை, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வழங்கத் தவறியமை, தொடர்ந்தும் தமிழர் தாய் நிலங்களை அபகரிக்க முனைகின்றமை, மக்களின் சுதந்திரச் செயற்பாடுகளை இராணுவ வல்வளைப்புக்கு உட்படுத்தியமை, தமிழர்களின் பாரம்பரியங்களை தொல்பொருள் சான்றுகள் என்று பிடுங்கி எறிந்தமை, மண்ணின் விடுதலைக்காக வித்துடலாகியவர்களின் நெஞ்சில் ஆக்கிரமிப்பின் கால்களை அகலப்பதித்தமை என்பவற்றின் பரிகார நீதியாகவே இன்றைய ஆட்சி, அதிகாரத்தின் சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது.

வரலாற்றின் உண்மைகளை மறைத்து, பௌத்த -சிங்கள இனவாதத்தால் கட்டமைக்கப்பட்ட செயல்களை ஊக்குவித்து, இன சமத்துவத்தை இல்லாதொழித்து, நீதியற்ற அநியாயச் செயல்களால் அதலபாதாளத்துள் வீழ்ந்து கிடக்கும் நாட்டில் இன்று மே தினம். நீறுபூத்த நெருப்பாக நின்றெரியும் இனப்பகைமையை இல்லாதொழித்து, சமத்துவமும் ஐக்கியமும் மிக்க சரித்திர தேசமொன்றைக் கட்டியெழுப்பும் சிந்தனை இன்று சிங்கள மக்களிடம் எழுந்துள்ளமை மகிழ்ச்சியும், இந்நாளின் எழுச்சியும் ஆகும்.

முற்போக்கு எண்ணங்களுக்கு முதன்மை நல்கி, பல்லின சமவாயங்களைப் பகிர்ந்தளித்து, தமிழர்மீது ஏற்படுத்தப்பட்ட கறைபடிந்த நிலையினின்று நீங்கி, சர்வதேசம் பகரும் நிலைமாறுகால நீதியை ஏற்று, வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தை அங்கீகரித்து, தமிழர்களின் சுயநிர்ணய உரித்துக்களை ஏற்று, வேற்றுமையில் ஒற்றுமை கண்டு முன்னோக்கிச் செல்லும் திடசங்கற்பம் சிங்கள இனவாத ஆட்சிபீடத்தில் ஏற்படாதவரை, இலங்கைத்தீவில் இன, மத வேற்றுமை அற்ற வகையில் தொழிலாளர் உரிமைகளைப் பெற்று வாழ முடியாது என்பதே இன்றைய மே தின அறைகூவல் ஆகும்- என்று அமைந்துள்ளது. (அ-ஒ-இ)

*குறைவான...*

கள் விதிக்கப்பட்டுள்ள போதிலும் ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புத் தொடர்பில் இலங்கை அவதானம் செலுத்தியுள்ளது. வெளிநாட்டுக் கையிருப்பில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் குறைந்த விலையில் மசகு எண்ணெயைப் பெற்றுக்கொள்வதன் மூலம் செலவைக் குறைக்க முடியும் என நம்பப்படுகிறது. இது குறித்து இலங்கை கனியவளக் கூட்டுதாபனம் முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் திறைசேரி அவதானம் செலுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அமெரிக்காவின் பொருளாதார தடைக்குள்ளாகியுள்ள ரஷ்யாவுடன் வர்த்தக ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ராஜதந்திர அனுமதிகள் அவசியமாக உள்ளன. இதன் காரணமாக திறைசேரி, இந்த விடயம் குறித்து வெளிவிவகார அமைச்சின் செயலரிடம் வினவியுள்ளது.

உக்ரைன் மோதல் காரணமாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் ஒரு பீப்பாய் 107 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனினும் ரஷ்யாவிடமிருந்து ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யை 35 அமெரிக்க டொலருக்கு பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (ஒ-இ)

## 10 வயதுச் சிறுவன் மீது வடமராட்சியில் துஷ்பிரயோகம்! இளைஞன் கைது

10 வயதுச் சிறுவன் ஒருவனை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

வடமராட்சிக் கிழக்கு குடாரப்புப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தந்தை கடற்றொழிலில் ஈடுபட்டு திரும்பியபோது, சிறுவன் விடயத்தைக் கூறியுள்ளான்.

பாதிக்கப்பட்ட சிறுவன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். கைது செய்யப்பட்ட இளைஞன் நீதிமன்றில் முற்படுத்தப்படுவான் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-113)

## விடுதியில் தீ விபத்து

பொரலஸ்கமுவ பிரதேசத்திலுள்ள விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. தெஹிவளை - கல்கிசை தீயணைப்புப் பிரிவு மற்றும் மொரட்டுவ மாநகர சபை தீயணைப்புப் பிரிவு ஆகியவை உடனடியாக தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தன. எனினும் இந்தத் தீ விபத்தில் விடுதி முழுமையாகச் சேதமடைந்துள்ளது எனவும் எவருக்கும் உயிர் ஆபத்து ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)


## மரண அறிவித்தல்



தோற்றம்
28.05.1982

மறைவு
01.05.2022

**சிவசுப்பிரமணியம் உதயகாந்**

ஊரெழு மேற்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் உதயகாந் அவர்கள் நேற்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2022) பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS) 1/6

## 5ஆம் ஆண்டு நினைவுகளுடன்



தோற்றம்
03 . 06 . 1976

மறைவு
02 . 05 . 2017

**அமரர் திருமதி**
**டொறின்மேரி அருள்வதனன்**

அன்பின் உறைவிடமே - என்றும்
அன்பின் ஆருயிரே
ஆண்டு ஐந்து சென்றாலும்
அகன்றிடுமா உன் நேசம்
ஈன்ற புதல்வர்கள் ஈரவிழிகளுடன்
இன்றும் ஏக்கத்துடன்

அம்மா ! அம்மா ! என்று
இறைவனின் சந்நிதியில்
இன்ப வாழ்வை நீ கழிக்க
ஈன்ற புதல்வர்கள் நாம்
ஈரவிழிகளுடன்....

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்
077 645 0304

(cs.19497) 2.6)

கணவர் - அ.அருள்வதனன்
பிள்ளைகள் - அ.சபிஷன், அ.றிஷாநாத்
அ.றிபோஷன்,
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவுதினம்



**செல்லப்பா செல்லத்துரை தேவதாசன் (தேவா)**
(ஓய்வுபெற்ற விலைமதிப்பீட்டு திணைக்கள உத்தியோகத்தர்)

மலர்வு
21 . 05 . 1948

உதிர்வு
02 . 04 . 2022

பெயரிற்கேற்றாற் போல் ஞானமும்
அன்பினால் பண்பினால் நட்பினால்
ஆளுமையால் எங்கள் உள்ளங்களில்
குடியிருக்கும் எம் பாசமிகு அப்பாவே!
கண்மூடித்துயிலும் போதும் காலையில்
கண் விழிக்கும் போதும்
எம் மனதில் உங்கள் இன்முகம் தான் தெரியுதப்பா
ஏழேழு ஜென்மம் ஆனாலும்
உங்கள் பிரிவின் துயர் ஆறாது
உங்கள் நினைவலைகள் என்றும்
எம் மனதில் நிழலாடிக்கொண்டே இருக்கும்
என்றும் உம் நினைவாய் வாழ்கின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

(cs.19558) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இப்தார்' நிகழ்வு



மன்னார், மே 2

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் 'இப்தார்' நிகழ்வு நேற்றுமுன்தினம் பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரஜைகள் குழுவின் ஆளுநர் சபை உறுப்பினர்கள், யாழ். பல்கலைக் கழக சமூகவியல்துறை பேராசிரியர் சுப்பிரமணியம் ஜீவசுதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-14,60)


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சோமசுந்தரம் கங்காதரன்

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையின் முன்னாள் செயலாளரும் முன்னாள் உள்ளகக் கணக்காய்வாளருமான திருமிகு சோ.கங்காதரன் அவர்களது பிரிவால் மிகுந்த துயரடைகின்றோம். அமரரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி !

சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

பரிபாலன சபை மாத்தனைக் கந்தசுவாமி கோயில்.

(CS 19580) 1/6

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 08 . 1983



மறைவு 30 . 04 . 2022

### அஸ்வினி விமலேஸ்வரன்

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சென். பீற்றர்ஸ் லேன். ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவரும். வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி மற்றும் யாழப்பாணம் சிவபூமி பாடசாலையின் பழைய மாணவியுமாகிய அஸ்வினி விமலேஸ்வரன் 30.04.2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் விமலேஸ்வரன் - கௌரீஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதியினர். வேலுப்பிள்ளை - பவளரத்தினம் தம்பதியரின் அருமைப்பேர்த்தியும். கோகுலனின் அன்புச் சகோதரியும். வினூஷியாவின் அன்பு மைத்துனியும். கவின்நிலா. ஆதிரையின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.15. சென் பீற்றர்ஸ் லேன். ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (02.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(cs.44461) (2.6)

## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 02 . 1936



உதிர்வு 01 . 05 . 2022

### திரு.சோமசுந்தரம் கங்காதரன்

(இளைப்பாறிய நில அளவைப் பட வரைஞர்)

யாழ். வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் கிருலப்பனையை வதிவிடமாகவும் கொண்ட திரு.சோமசுந்தரம் கங்காதரன் அவர்கள் நேற்று (01.05. 2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சோமசுந்தரம் அம்பிகைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், திரு.திருமதி கந்தையா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பராசக்தி அவர்களின் அன்புக் கணவரும், கங்கேஸ்வரி (ஆசிரியர்-சைவ மங்கையர் வித்தியாலயம்), சிவசக்தி (ஆசிரியர் - முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-4) காங்கேயன் (பூபாலசிங்கம் புத்தகசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ரவிச்சந்திரா (Accountant - Telesonic Lanka Pvt.Ltd), உமாசுதன் (Despatch officer, Built Element Ltd) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌஷீகன் (Software Engineer- Zillione Business Solutions), கஜானன் (கொழும்பு இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர் திரு.சிவபாலன் (Retired Surveyor) அவர்களின் அண்ணனும், அமரர் சரஸ்வதி அவர்களின் மைத்துனரும், சிவகுமாரியின் பெரிய தகப்பனாரும், சிவபாக்கியம், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற தையல்நாயகி, ராஜேந்திரன் (Retired Surveyor) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (02.05.2022) திங்கட் கிழமை காலை 8.30 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பி.ப 2.30 மணியளவில் நடைபெற்று, பி.ப 5.00 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.65, எட்மண்டன் வீதி, கொழும்பு-6.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 11 . 1944



மறைவு 01 . 05 . 2022

### பசுபதிப்பிள்ளை இராசரெத்தினம்

வேலணை கிழக்கு. வேலணை 1 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல-31, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை இராசரெத்தினம் நேற்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், மற்றும் காலஞ்சென்ற நல்லதம்பி தங்கம்மா தம்பதியரின் மருமகனும், இரத்தினம்மாவின் பாசமிகு கணவரும், பிரதீபா (பிரான்ஸ்), பிரசாந், பிரமதுரா (Cargills Bank) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜரிஸ் சேவியர் ஞானேந்திரன் (பிரான்ஸ்), பிராங்கிளின் ஜெரிஸ் (NDB Bank, கல்முனை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பூர்விதா, பிரணிதா (பிரான்ஸ்), பிரித்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவயோகம் (குணம்) மற்றும் திலகவதி, அரசரெத்தினம், சீவரெத்தினம், தனலெட்சுமி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமசாமி, இராசரெத்தினம், ஜெயமங்களசிரோன்மணி, சேகரானந்தம், பவா, செல்வம், சிவானந்தம் மற்றும் நல்லம்மா (மணி-பிரான்ஸ்), லோகநாதன், சர்வானந்தம், கிருஷ்ணானந்தம் (பவுண்), சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.31, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 19586) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணிலே 15 . 05 . 1933



விண்ணிலே 21 . 04 . 2004

## அமரர் ஐயம்பிள்ளை கந்தையா

**திதி: பூர்வபக்கம்**

எத்தனை ஆண்டுகள் கடந்து போனாலும்
உந்தன் நினைவுகள் நெஞ்சுக்குள் நிழலாடுதே
கடைக்கண் பார்வையும் கண்ணுக்குள் நிற்குதையா
காட்டிய பாசம் மனசையும் வதைக்குதையா !

உழைப்பின் திறனும் நேர்மையான செயலும்
ஊரே கூறுமையா உந்தன் பெருமைதனை
எத்தனை இடர்வந்தாலும் அத்தனையும் தாங்கியே
ஏதொரு குறையுமின்றி என்னையும் பார்த்தீரே

எப்படித் துணிந்தீரோ என்னையும் தவிக்கவிட
வாழ்ந்தது போதுமென்றா வானுலகம் சென்றுவிட்டீர்
என்னவனே உன்நினைவுகளை கண்ணீரால் கரைக்கின்றேன்
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் நின் ஆத்மா சாந்தியடைய

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

(cs.44430) (2.6)

மனைவி
கந்தையா காமாட்சி

# 02ஆம் ஆண்டு நினைவு

தோற்றம் 05 . 10 . 1942



மறைவு 25 . 04 . 2020

## நாகலிங்கம் இரத்தினம்

**திதி : துதிகை**

அம்மாவின் உணர்வுகள் என்றும் பாசத்தால் அழியாதவை.
நீ எமை காத்த பிள்ளைகள் ஓயாதிருக்கின்றோம்
உன் வழி பின் தொடர
எம் நெஞ்சங்களில் என்றும் நீ எழில் விடும் பொக்கிஷம்
உன் சிறப்பான எம் வாழ்க்கையை
வித்திட்டு எம் வாழ்க்கைக்கு
இறுதிவரை ஒளி தந்து உயர்வாக்கினாய்
என்றுமே உன் நாமத்தை பின்பற்றி காத்திருக்கின்றோம்.
அதுவே எமது இறுதி முடிவும்
கடைசி முடிவும் அம்மா...
என்றுமே நீ எங்களுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றாய்
என்றும் நீ எங்களுடன்.

அன்னாரின் நினைவு தின அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும், அத்தோடு தொடர்ந்து நடை பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


காளிகோவிலடி, அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.
077 555 8485

(CS 19562) 1-6

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 03 . 1942



இறப்பு 30 . 04 . 2022

## அமரர் சின்னத்தம்பி அருளம்பலம்

வாதரவத்தை புத்தூரை பிறப்பிடமாகவும் இல. 5 புத்தடி விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருளம்பலம் அவர்கள் 30.04.2022 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் அருளம்பலம் ஞானாம்பிகையின் பாசமிகு கணவனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, வள்ளிப்பிள்ளையின் இளையமகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்,இராசம்மா ஆகியோரின் மூத்த மருமகனும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, குமாரசாமி ,சின்னம்மா, இராசம்மா கந்தசாமி தங்கம்மா கைலாயபிள்ளை ஆகியோரின் பாசமிகு தம்பியும், மகேஷ்வரி, கனகாம்பிகை,திரவியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தவபாலருக்குமணி, விக்னேஷ்வரன், கோடீஸ்வரன், பத்மராணி(சுவிஸ்) மஞ்சுளா(ஜேர்மனி) புஸ்பலதா செல்வக்குமரன்(சுவிஸ்) காலஞ்சென்ற யசோதினி ஆகியோரின் பாமிகு தந்தையும், சின்னராசா, தேவராணி, உஷாரஞ்சினி, ரவீந்திரன் (சுவிஸ்), சதீஸ்கரன் (ஜேர்மன்), ஜெய்கிஷன், சுகந்தினி (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுஜீபா (சுவிஸ்), தினேஷ், சுஜானா, கனிமதி, சுஜித்தா (இலண்டன்), சுஜிந்தன், துசாந்தினி, வனிதா, யதுர்சன், தர்சிகா, யனுசிகா, யசித்தன் (சுவிஸ்), யனுசா (சுவிஸ்), யனுசன் (சுவிஸ்),சதுர்ஜன் (ஜேர்மன்), சானுகா (ஜேர்மன்), சோபிகா(ஜேர்மண்), சஜிதன், யானுசா, சஞ்யுதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கரிணிகா (சுவிஸ்), பாணுகா (சுவிஸ்), டேனுஜன் (இலண்டன்), அபிஜிதா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 12 ஆம் கட்டை விசுவமடுவில் உள்ள இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5, புத்தடி வீதி,
விசுவமடு.

(CS 19909)(3/6)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 01 . 1954



இறப்பு 01 . 05 . 2022

## திருமதி சூரியகுமாரி சிவஞானம்

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சூரியகுமாரி சிவஞானம் நேற்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிடர் வைத்திலிங்கம் தங்கம்மா தம்பதியரின் இளைய புத்திரியும், காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், சிவதாரணி தனராஜ் அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தனேஸ்வரன், புஸ்பராணி, பகவதி, பரமநாதன், சண்முகநாதன், கணேசமூர்த்தி, கனகேஸ்வரன், காலஞ்சென்ற உதயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனராஜ் அவர்களின் மாமியாரும், மாதங்கி, மாதவன், விஜய், அஸ்வர்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19565) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் தமிழ் அடிப்படைவாதிகளால் குழப்பம்

## சுதந்திரக்கட்சி கண்டுபிடிப்பு




கொழும்பு, மே 2

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திலும், சில தமிழ் அடிப்படைவாதிகள் தமது நிகழ்ச்சி நிரலைத் திணிப்பதற்கு முற்படுகின்றனர் என்று சுதந்திரக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத்தலைவரான எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் உருவச் சிலையில், அவரின் கண்கள் கறுப்புத் துணியால் கட்டப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் சில தமிழ் அடிப் படைவாதிகளே செயற்பட்டுள்ளனர் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலிமுகத்திடல் வளாகத்திலுள்ள பண்டாரநாயக்கவின் சிலை அகற்றப்பட வேண்டும் என தமிழ் கார்டியனில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே பண்டாரநாயக்கவின் கண்கள், கறுப்புத் துணியால் கட்டப்பட்டுள்ளன. காலிமுகத்திடல் போராட்டத்துக்கு நாம் ஆதரவு. எனினும், அதற்குள்ளும் சில தமிழ் அடிப்படைவாதிகள் தமது நிகழ்ச்சி நிரலைத் திணிப்பதற்கு முற்படுகின்றனர். இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும். இந்தச் சம்பவத்தை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் அடுத்தவாரம் முடிவெடுக்கப்படும்- என்றார். (க-44)



# முள்ளிவாய்க்காலில் வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு, மே 2

முல்லைத்தீவு- முள்ளிவாய்க்காலில் வெடிபொருள்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன. விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக எட்டு ஆர்.பி.ஜி. குண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. (ஒ-246)

# பிரேரணைக்கு 120 பேர் ஆதரவு

அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இதுவரையில் 120 பேர் கையொப்பமிட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரமளவில் சபாநாயகரிடம் கையளிக்கப்படும்.

அரசாங்கத்தில் இருந்து விலகியுள்ள சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பிரேரணைக்கு ஆதரவு வழங்கவுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (க-இ)

# 130 கிலோ கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி, மே 2

130 கிலோ கேரளக் கஞ்சா கிளிநொச்சியில் மீட்கப்பட்டுள்ளது. இராணுவப் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கஞ்சாப்பொதிகள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு வெளிஇடங்களுக்கு அனுப்பும் நோக்குடன் பூநகரி- வேரவில் பிரதேசத்தில் பற்றைக்குள் மறைக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-113)



# வன்முறைக்குழுவின் பதாகை சந்தேகத்தில் 16 பேர் கைது

வவுனியா, மே 2

வவுனியா- ஓமந்தை, கோதண்டர்நொச்சிகுளம் பகுதியில் வன்முறைக்குழு என்று அடையாளப் படுத்தப்படுபவர்களின் பதாகை வைத்திருந்த குற்றச்சாட்டில் 16 பேரை ஓமந்தைப் பொலிஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

இவர்கள் கொண்டாட்டம் ஒன்றுக்கு தயாராக இருந்த வேளை கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-110)


அன்னபூரணி தாய் அவதரித்த நாள் தனம், தானம், செல்வம் அனைவரின் வாழ்விலும் பெருக அட்சய திருதியை வாழ்த்துக்கள்.



சிறி நதியா நகை மாளிகை

NSR JEWELLERY

41 ஆண்டு கால அனுபவமிக்க கைராசியான நிறுவனம்

எமது 41 வருட கால சேவையினை வழங்க ஆதரவு நல்கிய எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்றை தினம் அன்புடன் அழைக்கின்றோம்.

2022 சுபகிருது வருடத்தின் அட்சய திருதியை தினத்திற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலம் : 03.05.2022 (செவ்வாய்க்கிழமை)

நேரம் : காலை 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 9.00 மணி வரை

எமது நிறுவனத்தில் அன்றைய தினம் தங்கம் வாங்கும் அனைவருக்கும் பெறுமதிமிக்க அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும்.

சித்திரை மாதம் சுக்ல பட்ச திருதியை அட்ஷய திருதியை நாளாகக் கொண்டாடுவது யாவரும் அறிந்த ஒன்று. அட்ஷய திருதியை அன்று நாம் செய்யும் எந்தக் காரியமும் வளர்ந்து கொண்டேயிருக்கும் பெருகிக் கொண்டேயிருக்கும் என்பது திண்ணம். இத்தகைய சிறப்பு மிக்க அட்ஷய திருதியை தினத்தன்று எமது வாழ்வின் தேவைகளில் ஒன்றாக விளங்கும் தங்கத்தினை தற்போதைய சூழ் நிலையில் தங்களின் வசதிக்கேற்ப பெரியதோ, சிறியதோ வாங்கி என்றும் குறைவில்லாத செல்வத்துடன் வளமுடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.



குறிப்பு : தற்போதைய சூழ்நிலை காரணமாக எமது வாடிக்கையாளர்களிற்கு தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாதுள்ளது. எனவே மேற்படி அழைப்பிதழினை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளவும்.

இல: 131 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2809

இல: 01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2709


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காக்கைதீவில் ரூ.5 லட்சம் திருட்டு

யாழ்ப்பாணம், மே 2
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காக்கைதீவு வீட்டுத்திட்டத்தை அண்மித்த பகுதியில் வாடியில் கொள்வனவுக்காக வைக்கப்பட்டிருந்த 5 லட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
காக்கை தீவுப்பகுதியில் கடலட்டை தொழிலில் ஈடுபட்டு வருகின்ற ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த சிவஞானம் நேற்று இரவு 8 மணியளவில் கடலுணவுகளை கொள்வனவு செய்வதற்காக 5 லட்சம் ரூபா பணத்தை வாடிக்குள் வைத்துவிட்டு கடற்கரைக்குச் சென்றுள்ளார்.
சிறிது நேரம் கழித்து மீண்டும் வாடிக்கு வந்து பார்த்தபோது 5 லட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-125)

# வன்முறைக்குழுவின் பெயரை பயன்படுத்தி துண்டறிக்கை

## சந்தேகத்தில் 5 பேர் கைது

முல்லைத்தீவு, மே 2
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வன்முறைக்குழுவின் பெயரைப் பயன்படுத்தி துண்டறிக்கை வெளியிட்ட சந்தேகத்தில் 5பேரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், அவர்களிடமிருந்து வாள் உட்பட பல ஆயுதங்களை தாங்கள் மீட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.
கடந்த 29ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வன்முறைக்குழுவின் பெயரைக் குறிப்பிட்டு பரவலாக துண்டறிக்கை வீசப்பட்டிருந்தது. அதில் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். துண்டறிக்கைகள் வீசப்பட்டிருந்த இடங்களிலுள்ள சி.சி.ரி.வி. காட்சிகள் ஊடாக துண்டறிக்கை வீசிச் சென்றவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.
புதுக்குடியிருப்பு- வேணாவில் 10ஆம் வட்டாரம் மற்றும் சிவநகர் பகுதிகளைச் சேர்ந்த 5 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் இருவரை தேடுவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து வாள், கோடாலி, கத்தி, கம்பிகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்களின் தொலைபேசிகளில் இளம் குடும்பப் பெண்களின் ஆபாச காணொலிகளும் இருப்பதாக பொலிஸார் கூறுகின்றனர். மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஒ-19)





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டம் மட்டக்களப்பில் நேற்று மாலை இடம்பெற்றது. (ஒ-இ)

### அனுமனைப்...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தின நிகழ்வு கொட்டகலை சி.எல். எவ். வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது=
இலங்கை அருகிலுள்ள நாடு, எமது சொந்தங்கள் வாழும் நாடு என இரு கோணத்தில் இந்தியா பார்க்கின்றது. அதனால்தான் நெருக்கடியான கட்டங்களில் உதவிகள் வழங்கப்படுகின்றன. உயிர் காப்பு மருந்து தேவை என்று சொன்னபோது, 107 வகையான 760 கிலோ மருந்துகளை அனுப்பி வைத்துள்ளோம். எதிர்காலத்திலும் உதவுவோம்.
மலையக மக்களுக்கான உதவிகளும் தொடரும். நாம் வளரும் அதேவேளை, எமது தொப்புள்கொடி உறவுகளையும் வளர வைப்போம். மலையகம் கல்வியால் உயர வேண்டும். அதற்கான உதவிகளும் தொடரும். இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை, நீண்டகாலத்துக்கானது அல்ல. விரைவில் நிலைமை மாற வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்- என்றார். (அ-ஒ-இ)

### கோத்தாவும்...

தற்கு மக்களுக்கு இடமளிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
'எனது ஆட்சிக் காலத்தில் நாட்டில் இது போன்று எந்தவிதமான சூழ்நிலையும் இருக்கவில்லை. எனது ஆட்சியின் பின்னர் மிகவும் நல்லதொரு நாட்டை ராஜபக்சக்கள் கைப்பற்றினர்' என்றும் குறிப்பிட்டார்.
முன்னதாக பிரதமர் மஹிந்த பதவி விலகி, சர்வகட்சி அரசு அமைப்பதற்கு மைத்திரிபால சிறிசேன இணக்கம் வெளியிட்டிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே நேற்று மேற்கண்டவாறு கூறியுள்ளார். (அ-ஒ-இ)

### மே 5க்கு...

கிழக்கு வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் உருவாக வாய்ப்புள்ளது. இது மேலும் வலுப்பெற்று தீவிர தாழமுக்கமாக மாறி வடக்கு நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக மே 5 ஆம் திகதியில் இருந்து வடக்கு முழுவதும் பரவலாக மிதமான மழை கிடைக்கும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-ஒ-5)

### வர்த்தமானி...

படுத்தும் வகையில் வெளியான வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப் பட்டுள்ளது.
கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் இது நடைமுறைக்கு வரும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ-ஒ-இ)

### 4ஆம் திகதி...

குற்றப்பிரேரணை என்பன நாடாளுமன்றத்தில் நாளைமறுதினம் 4 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற மே தின பேரணியில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ இதனை தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மேதின நிகழ்வு...



### ஓ.எம்.பி...

சிராஸ் நூர்தீன் அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார்.
காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களுக்கு, ஓ.எம்.பி. ஊடாக நன்மை பயக்கும் விடயங்களை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், அந்த அலுவலகத்தில் சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை என்று குறிப்பிட்டே பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.
கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இவர் இந்த அலுவலகத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### 15ஆண்டுகால...

ளார்.
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் கொட்டகலையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், மேலும் தெரிவித்ததாவது:
நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் மக்கள் பக்கம் நின்றே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவெடுத்தது. ஆனால் எமது சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் விதத்தில் ஒரு சிலர் செயற்படுவதால் தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
ஆயிரம் ரூபா என்பது எமது இலக்கல்ல என்பதை தேர்தல் காலத்திலேயே அறிவித்துவிட்டோம். கல்வியும், காணி உரிமையும்தான் பிரதான இலக்கு. அதனை அடைவதற்கே தீவிர முயற்சியில் இறங்கியுள்ளோம். எண்ணம் போல்தான் செயல் என்பார்கள். மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது கனவும் கூட. நான் பதவிக்காக அரசியல் செய்பவன் அல்ல. மக்களுக்கானதே எனது அரசியல் பயணம். அதனால்தான் ராஜபக்ச அரசுடனான உறவை முறித்துக் கொண்டு, இன்று மக்கள் பக்கம் நிற்கின்றோம். அப்படி இருந்தும் வரலாறு தெரியாத சிலர், காங்கிரஸை விமர்சித்து வருகின்றனர் - என்றார். (அ-ஒ-இ)

### ரமழான்...

தென்படவில்லை என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு அறிவித்துள்ளது.
தலைப்பிறை பார்க்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று இரவு இடம்பெற்றிருந்தது. இதன்போது நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பிறை தென்பட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப்பெறவில்லை என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு அறிவித்தது.
இதற்கமைய, இஸ்லாமியர்கள் இன்றும் நோன்பு நோற்பதுடன், நாளை புனித ரமழான் பண்டிகையை கொண்டாடவுள்ளனர். (அ-ஒ-இ)

### கூடாரங்களை...

இதனையடுத்து அலரிமாளிகைக்கு முன்பாக பிரதான வீதியில் அமர்ந்து போராட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
இதனால் காலி வீதியில் பெரும் நெரிசல் ஏற்பட்டுள்ளது.
இதேவேளை, மைனா கோ கமவில் கூடாரங்கள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கோத்தா கோ கமவைச் சேர்ந்தவர்கள், மைனா கோ கமவுக்கு பேரணியாக வந்து கூடாரங்கள், உணவு உள்ளிட்ட பொருள்களை வழங்கினர். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக அரசின் உதவிகள்

# தென்னிலங்கை அரசியல்வாதிகள் மனநிலையை மாற்றவேண்டும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 2**

**இந்திய அரசினதும் தமிழக அரசினதும் அவசர மனிதாபிமான உதவிகளுக்கு இலங்கை அரசாங்கம் நன்றி சொல்வதுடன் மட்டுப்படுத்திக்கொள்ளாமல்;, இதுவரை காலமும் இந்திய மற்றும் தமிழக மக்கள்மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சி களை கைவிட்டு இதன் பின்னராவது, தமது உண்மையான நண்பர்கள் யாரென்று தென்னிலங்கை அரசியல்வாதிகளும் மேலாதிக்க மனோநிலையில் உள்ள சிங்கள மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உத வும் தீர்மானத்தை தமிழக சட்ட சபையில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் ஏற்றுக் கொண்டு, அதற்கு ஆதரவளித்து தீர்மானம் நிறைவேற்றியதையிட்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் தமிழக அரசுக்கும் தமிழக மக்களுக்கும் ஈழத் தமிழ் மக்கள் சார்பாக எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழக அரசு காலாதிகாலமாக ஏதிலிகளாகத் தஞ்சம் அடைந்த எமது மக்களுக்கு பல்வேறுபட்ட உதவி களைச் செய்து வந்துள்ளது.தமிழக அரசு தனது இரத்த உறவுகளான இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு இக்கட்டான பல சந்தர்ப்பங்களில் பல உதவிகளைச் செய்திருக்கின்றது. அவ்வாறே இப்பொழுதும் அவர்கள் செய்ய விரும்பியபோதிலும்கூட இலங்கையில் உள்ள பல தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் சாதி, இனம், மதம், மொழி கடந்து இங்கு எல்லோருமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற அடிப்படையில் அந்த உதவிகள் எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, தமிழக அரசும் பெருமையுடன் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் அந்த உதவியைச் செய்ய முன்வந்திருக்கின்றது.

அதுமாத்திரமல்லாமல் தமிழக சட்டசபையின் சகல அங்கத்தவர்களும் தமது ஒரு மாத ஊதியத்தை இலங்கை மக்களுக்குக் கொடுப்பதற்கும் சம்மதம் தெரிவித்திருக்கின்றனர். இந்த மனிதாபிமான உதவிகளை நாம் வாழ்த்தி வரவேற்பதுடன், இன்றைய நிலையில் இலங்கையின் பெறுமதியில் ஏறத்தாழ 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான மிகப் பிரமாண்டமான நிதியுதவியில் அத்தியாவசியப் பண்டங்களை வழங்குவதற்கு தமிழக அரசு முன்வந்திருக்கிறது. தமிழக அரசு காலம் அறிந்து இந்த உதவிகளைச் செய்ய முன்வந்திருக்கின்றது. இந்திய ஒன்றிய அரசு இவ்வுதவிகளை மிக விரைவாக இலங்கை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்திய அரசினதும் தமிழக அரசினதும் அவசர மனிதாபிமான உதவிகளுக்கு இலங்கை அரசாங்கம் நன்றி சொல்வதுடன் மட்டுப்படுத்திக்கொள்ளாமல், இதுவரை காலமும் இந்திய மற்றும் தமிழக மக்கள்மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சிகளை இத்தகைய மனிதாபிமான உதவிகளின் பின்னராவது தமது உண்மையான நண்பர்கள் யாரென்று தென்னிலங்கை அரசியல்வாதிகளும் மேலாதிக்க மனோநிலையில் உள்ள சிங்கள மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்- என்றுள்ளது. (ஒ-5)

# உழைக்கும் மக்களால் நாட்டை மீட்க முடியும்

### தொழிற்சங்கக் கூட்டமைப்பு அழைப்பு

கொழும்பு,மே 2

நாட்டை மீண்டும் வழமையான நிலைமைக்குக் கொண்டுவரும் பொறுப்பு உழைக்கும் மக்களிடம் உள்ளது. எனவே நாட்டை மீட்பதற்காக உழைக்கும் மக்களான நாம் ஒன்றிணைய வேண்டும் என்று சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மே தினப் பேரணியில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்;

'திருடர்களை விரட்டுவோம், மீண்டு வருவோம்' என்ற தொனிப்பொருளில் இந்த மே தின ஊர்வலத்தை நடத்துகின்றோம். உழைக்கும் மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றிணையவேண்டும். அரசியலில் தமது வயிற்றுப் பிழைப்பை நடத்தும் முறையே இருக்கின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை வெளியேறுமாறு கோரி அகிம்சையான போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு இன்னும் பதில் கிடைக்க வில்லை. இதனால், அவர்களை நாங்கள் விரட்ட வேண்டியுள்ளது. உழைக்கும் மக்கள் என்ற வகையில் எமது வாழ்க்கைப் போராட்டம் இறுக்கமடைந்துள்ளது - என்றார். (க-இ)

## மேதின விளையாட்டுப் போட்டிகள் மன்னார் பேசாலையில் ஆரம்பம்



மன்னார், மே 2

வெற்றியின் சிறகுகள் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 'மே தின' விளையாட்டுப் போட்டிகள் பேசாலை புகையிரத வீதியில் உள்ள மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. மன்னார்-பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய பங்கு பேரவை, பேசாலை மீனவ கூட்டுறவுச் சங்கம், விக்டோரிஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் ஆதரவுடன் விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன. (ம-14,56)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வசாவிளானில் ஒட்டகப்புலத்தில் 30 பரப்புக் காணி 2 பரப் பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.**

- அச்சுவேலி தெல்லிப்பழை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பிரதான வீதியில் இருந்து 50 M தூரத்தில்
- ஒட்டகப்புலம் றோ.க.த.க. பாடசாலைக்கு அருகாமையில் 14 அடி பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 02 KM தூரத்தில்
- பரப்பின் விலை 5 லட்சம்

தொடர்பு: **077 9116 983**

CS 19584 (1.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

14 அடி பாதையுடன்

நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்

கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 2 KM தூரம்

நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து இருந்து 3 KM தூரம்

**பார்வையிடும் நேரம் :**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை**

**1 பரப்பின் விலை** 750,000/=

தரகர் தேவையில்லை

**ஜெயம் 077 8147 389**
**077 2417 589**

CS 19583 (1/6)

## அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து இடைக்கால அரசில் இணையோம்

### சஜித் திட்டவட்டம்

கொழும்பு, மே 2

தவிகளுக்கு ஆசைப்பட்டோ அல்லது அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்தோ சர்வ கட்சி இடைக்கால அரசில் இணைவதற்கு நாம் தயாரில்லை. போராட்டக்காரர்களின் திர்பார்ப்பு உரிய வகையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ட்டவட்டமாக அறிவித்தார்.

லங்கையின் 2ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ரணசிங்க பிரேம தாஸவின் 29 ஆவது நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்;இந்த ஆட்சியாளர்கள் குறித்து நாம் பலமுறை எச்சரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் வரிசைகளில் நின்று, நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் தான் மக்கள் உண்மையை உணர ஆரம்பித்துள்ளனர். நாட்டின் தற்போதைய நிலைமை மிக மோசமாக உள்ளது. பலர் தொழிலை இழந்துள்ளனர். அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மருந்துவகைகளின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. இவ்வாறான தொரு நிலையிலும் கொள்ளையடிப்பதற்காகவே இடைக்கால அரசாங்கத்தை அமைக்க ஆட்சியாளர்கள் முற்படுகின்ற னர். ஊழல், மோசடிகளுக்காகவே இந்த யோசனைகூட முன்வைக்கப்பட் டுள்ளது. பதவி, பட்டங்கள் வழங்கப்பட்டாலும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் கோரிக்கையைக் காட்டிக்கொடுக்க நாம் தயாரில்லை. அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முழுவீச்சுடன் செயற்படுவோம். இடைக்கால அரசாங்கத்துக்கு வராவிட்டால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்க நேரிடும் எனச் சிலர் எச்சரிக்கின்றனர். எனக்கு, பதவியைவிட கொள்கையே முக்கியம். பதவிகளை எந்த நேரத்திலும் துறந்து வாழ நான் தயார்- என்றார். (க-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.